ISBN:978-81-687049-0-9

108

செந்தமிழறிஞர்கள்

ஈரோடு
தமிழன்பன்





பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/149-%E0%AE%88%E0%AE%B0%E0%AF%8B%E0%AE%9F%E0%AF%81-%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%A9%E0%AF%8D

செந்தமிழ்சிற்பிகள்

ஈரோடு தமிழன்பன் *(1933 – 2025)*

அறிமுகம்

ஈரோடு தமிழன்பன் எழுத்தாளர், கவிஞர் (பிறப்பு 28.09.1933) மரபுக் கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் எழுதியுள்ளார். கவியரங்கங்களில் கவிதை வாசிப்பை நிகழ்த்தியுள்ளார். சிறு வயதிலேயே பாரதிதாசனின் இசையமுது, அழகின் சிரிப்பு போன்ற படைப்புகளை வாசித்து அதன் வழியே படைப்புலகுக்குள் நுழைந்தவர். திராவிட இயக்க நூல்களை வாசித்து அவ்வியக்கத்தின்மீது பிடிப்பு கொண்டவர். விடிவெள்ளி, மலையமான் போன்ற புனைபெயர்களில் எழுதியுள்ளார். தமிழ்ப் பொழில், கார்க்கி, சிகரம் போன்ற இதழ்களில் எழுதத் தொடங்கியவர். இவரது கவிதைகள் வங்கம், உருது, இந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இதழ்: அரிமா நோக்கு

படைப்பு:

நெஞ்சின் நிழல்

கொடிகாத்த குமரன்

சூரியப்பிறைகள்

வணக்கம் வள்ளுவ (சாகித்திய அகாதெமி விருது பெற்றது)

(😊)(😊)(😊)(😊) @@@@@@@@@@@@ (😊)(😊)(😊)(😊)

தமிழ் இணையக் கல்விக்கழகம்
தமிழ் வளர்ச்சித் துறை

https://tamildigitallibrary.in/nationalisedbooks/author-detail/205

ஆசிரியர் பற்றிய விவரம்

ஆசிரியர் பெயர்	ஈரோடு தமிழன்பன்
இயற்பெயர்	ந. ஜெகதீசன்
புனைபெயர்கள்	விடிவெள்ளி, மலையமான்
பிறந்த ஆண்டு	1933, செப்டம்பர் 28
பெற்றோர்	செ.இரா.நடராசன் - வள்ளியம்மாள்
வாழ்க்கைத் துணை	சாந்தகுமாரி
குழந்தைகள்	பாப்லோ நெரூதா, பாரதிதாசன்
பணி	ஆசிரியர், தமிழ்ப் பேராசிரியர், சென்னை செ வாசிப்பாளர், கவிஞர், திரைப்படப் பாடல் கதை வசன ஆசிரியர், திரைப்பட இணை இ
பதவிகள்	தமிழ்நாடு அரசின் இயல் இசை நாடக மன் உறுப்பினர், தமிழ்நாடு அரசின் அறிவியல் த
குறிப்பிடத்தக்க படைப்புகள்	வணக்கம் வள்ளுவ!, பாரதிதாசனோடு பத்த விழுதுகள், சிலிர்ப்புகள், தமிழன்பன் கவின
பிறந்த ஊர்	சென்னிமலை
வட்டம்	பெருந்துறை
மாவட்டம்	ஈரோடு
மாநிலம்	தமிழ்நாடு
நாடு	இந்தியா
விருதுகள் / பட்டங்கள்	தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது, சாகித்திய அகாதமி விருது, கலைமா அரசின் குறள் பீட விருது, தமிழவேள் உமா பெரியார் விருது, கலைஞர் பொற்கிழி விரு பரிதிமாற்கலைஞர் விருது, தினத்தந்தி வாழ் விருது, செம்மொழி ஞாயிறு விருது
நாட்டுடைமை ஆண்டு	2026
இறப்பு	2025, நவம்பர் 22
இறந்த ஊர்	சென்னை

https://erodetamilanban.com/


ஈரோடு தமிழன்பன் ஒரு தமிழகக் கவிஞர் ஆவார். ஆசிரியர், மரபுக் கவிஞர், கவியரங்கக் கவிஞர், புதுக்கவிதைக் கவிஞர், சிறுகதை ஆசிரியர், புதின ஆசிரியர், நாடக ஆசிரியர், சிறார் இலக்கியப் படைப்பாளி, வாழ்க்கை வரலாற்றாசிரியர், திறனாய்வாளர், கட்டுரையாளர், ஓவியர், சொற்பொழிவாளர், திரைப்பட இயக்குநர், திரைப்பட பாடலாசிரியர், என பன்முகப்பட்ட ஆளுமைகளைக் கொண்டிருப்பவர்.

சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளாராக பணியாற்றியவர். தமிழ்நாடு அரசின் இயல் இசை நாடக மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு அரசின் அறிவியல் தமிழ் மன்றத்தின் உறுப்பினராகவும் பணியாற்றி உள்ளார்.

பல விருதுகளை வென்றவர், தனது சுயாதீனமான பார்வைகள் மூலம் சமூகப் பிரச்சினைகளுக்கான தனது மனித மற்றும் மனிதாபிமான அணுகுமுறையை சிந்தித்து, ஒரு புதிய பழைய ஒழுங்கைப் பற்றிய அவரது பார்வை மற்றும் அவரது கலைத் தேர்ச்சி ஆகியவற்றின் மூலம் முதல் வரிசையின் கவிஞராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். அவரது கவிதைத் தொகுப்புகள் “வனகம் வள்ளுவ” (வணக்கங்கள் வள்ளுவா), அவரது கவிதைத் தொகுப்பான வனக்கம் வள்ளுவாவுக்காக தமிழுக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது. இந்த கவிதைகள் சங்கம் காலத்திலிருந்தே தமிழ் இலக்கிய பாரம்பரியத்தின் தொடர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல புதிய

திட்டங்களைப் பயன்படுத்தி திருக்குரலின் நவீன காலத்தின் பொருத்தத்தை ஆராய்கின்றன. தூர்தர்ஷனுக்கான செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

சாதனைச் சிறப்பு



தந்தை பெரியாரிடமிருந்து பகுத்தறிவுவாதத்தையும், மார்க்சிடமிருந்து பொதுவுடைமையையும், பாரதியிடமிருந்து தேசியத்தையும், பாரதிதாசனிடமிருந்து தமிழ்த் தேசியத்தையும், தாகூரிடமிருந்து இயற்கைவாதத்தையும், பாப்லோ நெருதா விடமிருந்து சர்வதேசியத்தையும், வால்ட் விட்மனிடமிருந்து யாப்புப் புதுமையையும், பாஷோவிடமிருந்து சொற்செட்டையும் நம் சித்தர்களிடமிருந்தும் ஜென்னிடமிருந்தும் மெய்யியலையும், தமிழ் மரபிலிருந்து யாப்பியலையும் பெற்றுக் கொண்டு, தாம் பிறந்த சென்னிமலை மண்ணின் தறியோசை களிடமிருந்து சந்தங்களையும் சேகரித்துக்கொண்டு தமக்கெனத் தனித்துவமான கவிதைப் பாட்டையை அமைத்துக் கொண்டு தொடர்ந்து அதில் பயணித்துக்கொண்டிருப்பவர் அவர்.

நூற்றிருபது ஆண்டு வரலாறு கொண்ட மறுமலர்ச்சித் தமிழ்க் கவிதையைத் தமது இடையறாத தொடர்ச்சியான கவிதைப் படைப்பால் மாணவப் பருவந்தொட்டுக் கடந்த எழுபது ஆண்டுகளாக வளப்படுத்திவரும் முதல் கவிஞர் அவர்.

தமிழில் அதிக அளவில் கவிதைத் தொகுதிகளை – 60க்கும் மேற்பட்ட தொகுதிகளையும்- 6 பெருந்தொகுதிகளையும் வெளியிட்ட முதல் கவிஞர் அவர்.

'உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன்... வால்ட் விட்மன்! '(1998) எனும் கவிதைத் தொகுதிமூலம் புதுக்கவிதையில் முதல் பயண இலக்கியம் படைத்த முதல் கவிஞர் அவர்.

2000இல் எழுதி 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது பெற்ற வணக்கம், வள்ளுவ! என்னும் கவிதைத் தொகுதிவழிப் புதுக்கவிதையிலான முதல் திறனாய்வு நூலை எழுதிய முதல் கவிஞர் அவர். ஒரு வண்டி சென்ரியு (2001) எனும் கவிதைத் தொகுதிவழி ஜப்பானியக் கவிதை வடிவங்களுள் ஒன்றான சென்ரியுவைத் தமிழில் அறிமுகப்படுத்திய முதல் கவிஞர் அவர்.

ஜப்பானியக் கவிதை வடிவங்களுள் ஒன்றான ஹைக்கூவைத் தமிழில் பிரபலப்படுத்திய முதல் கவிஞர் அவர்.

லிமெரிக், ஹைகூ ஆகிய கவிதை வடிவங்களை இணைத்து டெட் பாக்கர் அறிமுகப்படுத்திய கவிதை வடிவமான லிமரைக்கூவைச் சென்னிமலைக் கிளியோபாத்ராக்கள் (2002) என்னும் கவிதைத் தொகுதி வாயிலாகத் தமிழில் படைத்த முதல் கவிஞர் அவர்.

2009இல் நிகழ்ந்த ஈழப்போரில் கொத்துக்கொத்தாய்த் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது அந்த இனப் படுகொலையைக் கண்டித்துத் தமிழகத்தில் பலரும் எழுத முன்வராத நிலையில் நெஞ்சுரத்துடன் என் அருமை ஈழமே! (2009) என்னும் கவிதைத் தொகுதியைத் துணிச்சலாய் எழுதி வெளியிட்ட முதல் கவிஞர் அவர்.

2012இல் வெளிவந்த கஜல் பிறைகள் வாயிலாகப் பாடதக்க கஜல் கவிதைத் தொகுதியைப் படைத்த முதல் கவிஞர் அவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தால் இரண்டு முறை தேசியக் கருத்தரங்கு நடத்தப்படப் பொருண்மைக்களமாக விளங்கிய கவிதைகளைப் படைத்த முதல் கவிஞர் அவர்.

ஒரு கூடைப் பழமொன்ரியூ (2014) வழியாகப் பழமொழியையும் சென்ரியூவையும் இணைத்துப் பழமொன்ரியு எனும் கவிதை வடிவத்தை முதன்முதல் உருவாக்கி அறிமுகப் படுத்திய முதல் கவிஞர் அவர்.

பாப்லோ நெருதா எழுதிய Book of Questions என்னும் வினாக்களாலான கவிதைத் தொகுதியை முன்மாதிரியாகக் கொண்டு கனாக் காணும் வினாக்கள் (2004), இன்னும் சில வினாக்கள் (2015) எனும் வினாக்களாலான கவிதைத்

தொகுதிகள் இரண்டு இயற்றிய முதல் கவிஞர் அவர். பிறப்பால் ஆங்கிலேயராகவும், வாழிடத்தால் சீனராகவும் வாழும் முறையால் தமிழராகவும் வாழ்ந்துவருபவரும் – இங்கிலாந்தில் பிறந்து ஹாங்காங்கில் வாழ்ந்துவருபவருமான பேராசிரியர் கிரிகோரி ஜேம்ஸ் இவ்விரு நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து Poems of Questions என்னும் பெயரில் ஒரே நூலாக வெளியிட்டுள்ளார். இப்படி ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவரால் இக்காலக் கவிதை ஆங்கிலத்தில் முதன்முதலில் ஒரு மொழிபெயர்ப்புக் காண மூலநூல் தந்த முதல் கவிஞர் அவர். இதே நூலுக்குப் பேராசிரியர் கிரிகோரி ஜேம்ஸ் அவர்களும் லொரைன் போக் (Loraine Bock) என்னும் ஸ்பானியப் பெண்மணியும் இணைந்து Poemas de Preguntas என்னும் மகுடம் தாங்கிய ஸ்பானிய மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளது. இக்காலத் தமிழ்க் கவிதை ஸ்பானிய மொழியில் முதன்முதலில் ஒரு மொழிபெயர்ப்புக் காண மூலநூல் தந்த முதல் கவிஞர் அவர்.

2017 நவம்பர் 8இல் அமெரிக்காவில் டல்லாஸ் நகரிலுள்ள மெட்ரோப்ளெக்ஸ் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கவிஞர் தி. அமிர்தகணேசன் முயற்சியால் ஈரோடு தமிழன்பனின் 1000 கவிதைகளை வாசிக்கும் கவிதைத் திருவிழா நடைபெற்றது. அமெரிக்காவில் நடைபெற்ற முதல் கவிதைத் திருவிழா மட்டுமன்றி இப்படியொரு திருவிழா எடுக்கப்பட்ட முதல் கவிஞரும் ஈரோடு தமிழன்பனே ஆவார்.

2019 செப்டம்பர் 28இல் வட அமெரிக்க வானொலியில் தமிழன்பன் பிறந்தநாள் வானலையில் அமெரிக்கத் தமிழர்கள் பலர் தமிழன்பன் கவிதை வாசிப்பு நிகழ்த்திக் கொண்டாடினர். இப்படியொரு பிறந்தநாள் திருவிழா எடுக்கப்பட்ட முதல் கவிஞரும் ஈரோடு தமிழன்பனே ஆவார்.

இவ்வாறு எண்ணற்ற முதல்களுக்கெல்லாம் முதல் எனும் முத்திரை கொண்ட – முதன்மைச் சிறப்பு மிக்க ஒரே கவிஞர் மகாகவி ஈரோடு தமிழன்பன் ஆவார். இதற்குக் காரணம் ,முத்தினிடத்து ஒளியும் ,காற்றினிடத்து இசையும், பூவினிடத்து மணமும் குடிகொண்டிருப்பதைப்போலத் தமிழன்பனிடத்துக் கவிதை குடிகொண்டிருப்பதே ஆகும்.


வணக்கம்! **[வணக்கம் வள்ளுவ!]** என்பது கவிஞர் ஈரோடு தமிழன்பன் எழுதிய ஒரு புகழ்பெற்ற புதுக்கவிதை நூல்.

- **சிறப்பு:** இந்த நூல் 2004-ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றது.
- **பொருள்:** திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு, அதன் கருத்துக்களைப் புதுக்கவிதை வடிவில் இந்நூல் விளக்குகிறது.
- **பதிப்பகம்:** பூம்புகார் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

வணக்கம் வள்ளுவ!
கவிதைத் தொகுப்பு ஒரு பார்வை

https://neerodai.com/vanakkam-valluva-nool-vimarsanam/

ஈரோடு தமிழன்பன் அவர்களின் வணக்கம் வள்ளுவ! கவிதைத் தொகுப்பு. 2004ம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது பெற்ற நூல், பூம்புகார் பதிப்பகம் வெளியிட்ட நூல் 190 பக்கங்கள் கொண்டது – vanakkam valluva nool vimarsanam



உலகப்பொதுமுறை திருக்குறளின் மையக் கருத்துக்களை உள்வாங்கி அவற்றைச்சாறெடுத்து இனிய பழரசமாக நமக்கு புதுக்கவிதை வடிவில் கொடுத்து மகிழ்கிறார் கவிஞர்.ஈரோடு தமிழன்பன் அவர்கள்.

நவீன யுத்திகள், எளிதான வார்த்தைகள், உணர்ச்சிப் பெருக்குகள், இந்த வணக்கம் வள்ளுவ நூலின் சிறப்பம்சம்.

சிவத்தம்பி அவர்களின் முன்னுரையான வாழ்த்துதுரையும், ஆங்கிலப் பேராசிரியர் சங்கரநாராயணன் அவர்களின் வாழ்த்துரையும் சிறப்பாக அமைந்துள்ளது.

ஸ்யாம் அவர்களின்முகப்பு ஓவியமாக வள்ளுவர் அமர்ந்திருப்பதும், உள்ளே உள்ள மருது அவர்களின் கோட்டோவியங்கள் இப்புத்தகத்தின் அணிகலன்கள்.

மொத்தம் 22 கவிதைகள். அத்தனையும் நீள்கவிதைகள். வணக்கம் வள்ளுவ என்ற கவிதை முதல் கவிதையாகவும் உலக மனிதனை உருக்கி வார்க்க என்ற கவிதை நிறைவு கவிதையாகவும் அமைந்துள்ளது – vanakkam valluva nool vimarsanam.

கவிதைகள் அனைத்தும் தலைப்போடு ஒரு கோட்டோவியம், அடுத்து நீள்கவிதையின் சாராம்சம் தரும் ஒரு குறுங்கவிதை, அதன் பின்னே நீள்கவிதை நம் கண் முன்னே வருவதாக நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த நூலில் நான் ரசித்த ருசித்த இனிய பழச்சாறு கவிதைகளை இங்கே பகிர்ந்து மகிழ்கிறேன்.

வணக்கம் வள்ளுவ

வணக்கம் வள்ளுவ இந்த தலைப்பில் அவர் எழுதிய கவிதையில் நான் ரசித்த வரிகள் இதோ...

*“காலம்
உன் கருத்துக்களின் சந்திப்பில்
தனது கோடுகளை
கரைத்து விட்டது”*

*“அரசர்களின் இதயங்களிலிருந்து
ஆணையிட்டுக் கொண்டிருந்த அதிகாரங்களை
அப்புறப்படுத்தி விட்டு
மக்களை அங்கு நீ அமர வைத்தாய்”*

*“மக்கள் தலைக்கு மேல்
உன் குறட்பா குடை பிடித்தது
மன்னர்கள் நினைவுக்குள் பெருகியது...
நிழல் வெள்ளம்”*

ஆம் வள்ளுவத்தின் சிறப்பை வாழ்த்தி எழுதிய உன்னதமான வரிகள் மேற்கண்டவை.

எட்டாவது சீர்

எட்டாவது சீர் என்ற கவிதை மிக அழகான ரசிக்கத்தக்க கவிதை.

"ஏழாவது சுரம்
கதவை இழுத்து மூடியதால்
எட்டாவது சுரம்
ஏமாந்து திரும்பி இருக்கலாம்"

.என்று தொடங்கும் கவிதை வானவில்லின் ஏழு நிறங்களையும், வாரத்தின் ஏழு கிழமைகளையும் சொல்லுவதோடு மட்டுமின்றி உலகத்தின் நடப்புகளில் ஏழை பட்டியலிடுகிறார் கவிஞர்

"எட்டாவது சீர்கள் எல்லாம்
இப்போது உன் சிலை முன்
உண்ணாவிரதம் இருக்கின்றன
என்ன கோரிக்கை தெரியுமா?

திரும்பவும்
நீ வந்து இன்னொரு திருக்குறள் எழுதும்போது
ஏழு சீடர்களுக்கும் வேண்டுமாம்"

என்று கவிதையை நிறைவு செய்கிறார். ஆம் வள்ளுவரே இது அவர் ஆசை மட்டுமல்ல எங்கள் ஆசையும் கூடவே!

வள்ளுவரின் கனவாக என்ற தலைப்பில் அவர் எழுதிய உன்னத வரிகள் நமது கனவிலும் நடந்து அது நம் வாழ்வெனும் நினைவில் நடத்தல் வேண்டும்.

"வள்ளுவர் உறங்கிக் கொண்டிருக்கிறார்...
பனை ஓலையும் எழுத்தாணியும் விழித்திருக்க"

என்றவாறு தொடங்கும் கவிதையில் கவிஞரின் கனவு யாதெனில்

"நானும் உறங்க வேண்டும் வள்ளுவர் போல்..
வள்ளுவர் தூக்கத்திற்குள்
ஒரு கனவாக நுழைந்து விட
நான் உறங்க வேண்டும்"

என்பதாக சொல்லியுள்ளது அருமை.

உலக மனிதனை உருக்கி வார்க்க வள்ளுவரோடும், பூங்குன்றரோடும் இந்தக் கவிதையின் மூலம் அவர் முயன்றுள்ளது அற்புதம்.

"சூரியனையும் பூமியையும்
தொட்டுக் கொண்டு பேசினான்

***கணியன் பூங்குன்றன்..
தமிழ் அவன் சொற்களுக்குள் புகுந்து
திசைகளை விரிவுபடுத்தியது"***

என்றவாறு தொடங்குகிறது இந்தக்கவிதை. பூங்குன்றனாரின் எண்ணங்களை தன் வரிகளில் பூத்துக்குலுங்கும்படி செய்திருக்கிறார் கவிஞர்.

மேலும் இக்கவிதையில் அவர் சொன்ன மற்றொரு வரிகள் இதயத்தில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இதோ அவ்வரிகள்...

***"அர்த்தங்களை மாற்றிவைத்து
வார்த்தையை வாழ்க்கையை
அழுக்காக்கி விடுகிறான் மனிதன்
திசை மாற்றி வைப்பானோ மனிதன் என்று
தினம் தினம் விடியல் கூட தடுமாறி விடுகிறது"***

என்ற அச்ச வார்த்தைகளும் நம் நெஞ்சில் உச்சம் தொட்டது. ஆம் அதற்காகவே உலக மனிதனை உருக்கி வார்க்க வேண்டும்.. வள்ளுவம் தழுவும் வடிவத்திலும்... பூங்குன்றனாரின் பொதுச்சிந்தனையின் புன்னகையிலும்...

இந்தக் கவிதையை அவர் நிறைவு செய்யும் போது

***"இங்கும் உலக மனிதனை உருக்கி வார்க்கக்
கொல்லுப்பட்டறை திறந்தனர்..
பூங்குன்றன் பேரர்கள்..
இதோ சத்தியச் சுத்தியல்
சம்மட்டி ஓசை
யாதும் ஊரே யாவரும் கேளீர்"***

என்று நம் மனதில் நிலைக்கிறது தமிழன்பன் அவர்களின் ஒவ்வொரு வரிகளும்...

இத்தொகுப்பு முழுவதும் நிரம்பி வழியும் வள்ளுவத்தை நம் மனதில் ஏற்றினாலே போதும்...உலகமும் நம் வாழ்வும் வசப்படும்.

கோவை ஞானி அவர்கள் தமிழன்பனின் படைப்பும் பார்வையும் நூலில் ஒரு இடத்தில் சொல்லியிருப்பார்.

"தமிழன்பனின் கவிதைகளில், அதீத அழுத்தத்தோடு இன்று வரலாற்று வளர்ச்சிக்கு தேவைப்படுகின்ற பொது புதிய மனிதன் பற்றிய படிமம் தான் எடுப்பாக தெரிகிறது"

ஆம் உண்மைதான்... வணக்கம் வள்ளுவத்திலும் அதுவே மிளிர்கிறது.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் நம் கண்முன்னே கொண்டு வந்த வள்ளுவத்தை போற்றிப் புகழ்வதோடு நின்று கொள்ளாமல் நாளும் வாசிப்போம். இன்புறுவோம்!

– ம.சக்திவேலாயுதம்

எட்டாவது சீர் - ஈரோடு தமிழன்பன் வணக்கம் வள்ளுவ

https://www.youtube.com/watch?v=_t2spDp65CM

[26:50]

ஈரோடு தமிழன்பன்

https://www.tamilvu.org/courses/degree/p103/p1032/html/p1032614.htm

புதுக்கவிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர் சிலர். அவருள் ஈரோடு தமிழன்பனும் ஒருவர். மரபுக் கவிதை எழுதிப் புதுக்கவிதைக்கு வந்த தமிழ்ப் பேராசிரியர்.

எதற்கப்பா எதுகை மோனை
மின்னலைப் பிடித்து
வைக்கவா சட்டி பானை?

என்று கேட்கும் குறும்பாக்களையும் படைப்பவர்.

இவரது சென்னி மலைக் கிளியோப் பாத்ராக்கள் சிறந்த 'லிமரைக்கூ' என்னும் புதுவகைக் குறும்பாக்களின் தொகுதி. இதைப்பற்றி இனி வரும் பகுதி விளக்குகிறது.

பிறப்பு

தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டம் சென்னி மலையில் பிறந்தவர். பெற்றோர் : செ.இரா.நடராசன் - வள்ளியம்மாள். பெயர் ; ந.செகதீசன்.

புனை பெயர்கள்

புனை பெயர்கள் : தமிழன்பன், ஈரோடு தமிழன்பன், விடிவெள்ளி.

கல்வியும் பணியும்

தனிப்பாடல் திரட்டு - ஓர் ஆய்வு என்ற ஆராய்ச்சிக்காக முனைவர் (பிஎச்.டி) பட்டம் பெற்றவர். சென்னை, புதுக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

படைப்புகள்

சிறந்த சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையாளர். பதினைந்துக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார். நிறைய எழுதி வருகிறார். சிலி நாட்டு மகாகவி பாப்லோ நெருதாவைத் தம் உள்ளத்துள் இருக்கும் நண்பனாகக் கொண்டு கற்பனையில் உரையாடி வருபவர்.

6.4.1 குறும்பாவில் புதுப்பா

இனிய நண்பர்களே! ஹைக்கூ என்னும் 5,7,5 அசையுள்ள மூன்றடி ஜப்பானியக் கவிதை வடிவம் பற்றி அறிவீர்கள் அல்லவா? லிமரிக் என்ற ஆங்கில ஐந்துவரிக் கவிதை பற்றியும் இப்பாடத்தில் அறிந்தீர்கள்.

ஆங்கில மொழியில் இந்த இரு வடிவங்களையும் இணைத்து ஒரு கலப்பு இனக் குறும்பா கண்டுபிடிக்கப் பட்டது. முதன்முதலில் இதை உருவாக்கியவர் டெட் பாக்கர் (Ted Pauker) என்னும் கவிஞர். இவர் தம் கலப்பு இனக் குறும்பாவுக்கு லிமரைக்கூ(லிமரிக்+ஹைக்கூ) என்று பெயரிட்டார்.

இவ்வகைக் குறும்பாக்களைத் தமிழில் படைத்து, 138 பாக்களைத் தொகுத்து, 'சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள்' என்ற பெயரில் ஈரோடு தமிழன்பன், வெளியிட்டிருக்கிறார்.

6.4.2 கவிதைக் கலை

லிமரைக்கூ என்பதால், உள்ளடக்கத்தில் லிமரிக், ஹைக்கூ இரண்டின் தன்மைகளும் கொண்ட கவிதைகள் இதில் உள்ளன. இயற்கை சார்ந்த கவிதை வெளிப்பாடுகளுள், சமூக இழிவுகளை நையாண்டி செய்யும் அங்கத இயல்புள்ள கவிதைகளும் இதில் அடங்கியுள்ளன. வடிவம் :

மூன்று வரிகள். முதல்வரியிலும், மூன்றாவது வரியிலும் இயைபு (ரைம்). சிலவரிகளில், முதற்சொல்லில் மோனை உள்ளன.

போலிக் குருமார்கள்

பரம்பொருள் (இறைவன்) மீது வைக்கும் பற்றுதான் பக்தி. இது தடம்புரண்டு பொன்மீதும், பொருள்மீதும், புகழ்மீதும் வைக்கும் போலிப் பக்தியாய் ஆகிவிட்டது. போலிப் பக்தர்களால் போலிக் குருமார்கள் பெருகிவிட்டனர். மக்கள் மடத்தனத்தைப் பயன்படுத்தி, மடங்கள், மாளிகைகள், பெரும் சொத்துகள் என்று வசதி பெருக்கி வாழ்கின்றனர். இதைச் சாடாத கவிஞர்களே இல்லை. தமிழன்பன் அழகாகக் கேலி செய்கிறார் :

குருக்களே தெய்வங்கள் ஆனார்கள்
கோயில் இல்லா ஊர்களிலே தெய்வங்கள்
குடியிருக்கப் போனார்கள். (பக்கம் : 30)

‘கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்பது இந்த நாட்டுப் பழமொழி. மனிதர்களுக்குத் தெய்வ நம்பிக்கையுள்ள மனிதர்கள் சொன்னது இது. குருக்களின் சுரண்டலும், அதிகார அட்டகாசமும் பொறுக்க முடியாமல், தெய்வங்களே கோயில் இல்லாத ஊர்தேடி ஓடிப்போய் விட்டனவாம். தமிழன்பனின் குறும்பா இதை எவ்வளவு குறும்பாகச் சொல்கிறது பாருங்கள் ! கோயில் உள்ள ஊருக்குப் போனால் அங்கேயும் துரத்தி வந்துவிடுவார்களே, இந்தப் போலிக் குருமார்கள் ! இக்கவிதையை அரசியல் முதலிய பிறதுறைகளுக்கும் கூடப் பொருத்திப் பொருள் கொள்ள முடியும். இன்றைய சமுதாய நிலையின் அழகான படப்பதிவு, இது.

இதே வகையில் நல்ல பல லிமரைக்கூக்கள் படைத்துள்ளார் தமிழன்பன்.

போலிப் பக்தர்கள்
பாடுவது அருட்பாப் பதிகம்
அன்றாடம் உணவில் ஆடுகோழி
மீன் நண்டு வகைகளே அதிகம் (பக்கம் : 28)

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய நெஞ்சம் வள்ளலார் இராமலிங்கர் அருள் நெஞ்சம். அவரது பக்தர் நிலை எப்படி? அவர் பாடிய திரு அருட்பாவைத் தினந்தவறாமல் பாடும் 'வாய்' வேறு, 'வயிறு' வேறாக இருக்கிறது. வழியைப் பின்பற்றாமல் மொழியை இசைப்பதா பக்தி? போலித்தனத்தைக் கிண்டல் செய்யும் கேலித்தனம் சிறப்பாக உள்ளது.

கொள்கைவேறு குணம்வேறு

அரசியலைச் சாக்கடை என்பார்கள். கட்சியின் சின்னத்தைக் கண்டு மயங்கி வாக்களித்தனர் மக்கள். அதாவது கட்சியின் கொள்கைகளால் கவரப்பட்டு வாக்களித்தனர். அக்கட்சி ஆட்சிக்கு வந்தும் அதன் கெட்ட குணமும் போகவில்லை. ஊரும் நன்றாகவில்லை.

ஊது வத்திச் சின்னம்
கட்சி வென்று கோட்டை பிடித்தும்
நாற்றம் போகலை இன்னும்

(போகலை = போகவில்லை என்பதன் கொச்சை மொழி)

சாவில் கிடைக்கும் வாழ்வு

எதையாவது விற்று எந்த வழியில் வேண்டுமானாலும் பொருளைத் தேடிக் குவிக்க வேண்டும் - இந்தச் சந்தைப் பொருளாதாரம் உயர்ந்த ஒழுக்க நெறிகளையும், வாழ்க்கை மதிப்பீடுகளையும் கருக்கிவிட்டது. இதை அழகாக விமர்சனம் செய்கிறது இந்தக் குறும்பா :

புகை பிடித்தால் இறப்பாய்
மது குடித்தால் இறப்பாய்
இரண்டும் விற்றால் வாழ்வில் சிறப்பாய் !

தனி மனிதர் மட்டுமல்ல அரசுகள் கூட இதைப் போன்ற அழிவுப் பொருட்களை மக்களிடம் விற்றுப் பணம் குவிக்கின்றன. இந்த இழிவுப் பாதையை எள்ளி நகையாடிக் கண்டிக்கிறது கவிதை.

'பாசமு' ம் 'நேசமு' ம்

'பொருள் ஆதாரம்' மக்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது. பெற்றோர், பிறந்தோர், சுற்றத்தார் இடையில் கூட எப்படிப் புகுந்து 'விளையாடுகிறது' ! பாலைவன நாட்டுக்குப்

போய்ப் பாடுபட்டு உழைத்துவிட்டு ஊர்திரும்புகிறான். அவன் மீது உள்ள பாசத்தைவிட, அவன் கொண்டுவரும் பொருள் மீதல்லவா 'குடும்பப் பாசம்' பொங்குகிறது! அருமையாய் இதை வெளிப்படுத்துகிறார் தமிழன்பன்.

துபாயில் அதிகமா வெய்யில் !
கேள்வி கேட்டோர் கவனம் எல்லாம்
அவன் இறக்கிவைத்த பையில் !

அலைகளின் அழுகை

இயற்கையில் இழைந்து கரையும் இளகிய மனம் கவிமனம். மனத்தின் இந்த 'ஹைக்கூ' த் தன்மையே சிறந்த கவிதைகளின் மூலதனம். கடலின் குமுறலுக்குக் காரணம் காண்கிறது, இந்த லிமரைக்கூ :

அத்தனை மீன்கள் வலைகளில்
அடுத்தநாள் கடலிலே
அத்தனை அழுகை அலைகளில் ! (பக்கம் : 29)

குழந்தையும் கவிஞனும்

தாத்தா ஆகும்போது கவிஞன் குழந்தை ஆகிறான். அப்போது பேரக் குழந்தைகளும், அவர்களது பொம்மைகளும் அவனுக்கு விளையாட்டுத் தோழர்கள் ஆகிவிடுகின்றனர். தமிழன்பனின் குறும்பாக்களில் குழந்தைகள், பொம்மைகள் பற்றியவை மிகுதியாய் உள்ளன.

செடிகொடிகளின் பூக்கள் எல்லாம் என்ன தெரியுமா? குழந்தை உதட்டில் இடம் கிடைக்காமல்போன 'சிரிப் பூ' க்கள் தானாம் (பக்கம் : 52)

குழந்தைக்குத் தன் பொம்மை மேல் எவ்வளவு பாசம்! உறங்கும் போதும் அதைக் கையில் இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதன் தாய்க்கே இதைக் கண்டு பொறாமை வருகிறதாம் ! (பக்கம் : 32)

குழந்தை கைக்குப் போவதற்கு, அதனுடன் விளையாடுவதற்குப் பொம்மைகளுக்குள் போட்டி, பொறாமையாம் :

குழந்தைக்கு ஒரு பொம்மை பிடிக்கும்
உள்ள பொம்மை அத்தனையும் குழந்தை
கைக்குப் போகத் துடிக்கும் ! (பக்கம் : 42)

இவ்வளவு பாசம் காட்டும் ஒரு குழந்தை இறந்து போய்விட்டால்...... உயிரற்ற பொம்மையின் உள்ளத்துக்குள் கவிஞர் தம் உயிரைச் செலுத்தி எண்ணிப் பார்க்கிறார் :

மழலைக்கா இறுதி யாத்திரை?
பழகிய பொம்மைக்கும் தூக்கம் இல்லை
கேட்கிறது தூக்க மாத்திரை (பக்கம் : 32)

(இறுதியாத்திரை = சாவு ஊர்வலம்)

தமிழன்பனின் லிமரைக்கூ - குறும்பாக்கள் சிரிப்பையும் வரவழைக்கின்றன. சிந்தனையையும் எழ வைக்கின்றன. சிலவேளை நம்மை அழவைக்கின்றன.

தனித்துவம் மிக்க தமிழ்ப் பெரும் கவிஞர்
ஈரோடு தமிழன்பன்

HTTPS://WWW.KEETRU.COM/INDEX.PHP/2010-06-24-04-31-11/UNGAL-NOOLAGAM-DEC25/49018-TANITTUVAM-MIKKA-TAMILP-PERUM-KAVINAR-IROTU-TAMILANPAN

கவிஞர் ஈரோடு தமிழன்பன் 1950களில் கவிதைத் துறையில் அடியெடுத்து வைத்தவர். 1960களில் முழுமூச்சாய் கவிதை உலகில் வலம் வந்தவர். 1970ஆம் ஆண்டு தனது முதல் கவிதைத் தொகுப்பான 'தமிழன்பன் கவிதைகள்' நூலை வெளியிட்டவர். இறுதி மூச்சு வரை எழுத்துத் துறையில் இடையறாது இயங்கிக் கொண்டிருந்தவர்.

ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் 28.09.1933ஆம் தேதி பிறந்தவர் தமிழன்பன். இவரது பெற்றோர் இவருக்கு வைத்த பெயர் ஜெகதீசன். பிற்காலத்தில் இவர் தமிழ்மீது கொண்ட ஆழமான பற்றினால் 'தமிழன்பன்' என்ற புனைபெயரை வைத்துக் கொண்டார். கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியில் முறைப்படி தமிழ் பயின்ற இவர் பிற்காலத்தில் முனைவர் பட்டம் வரை பயின்று தனது ஆய்வறிவை வளர்த்துக் கொண்டார்.

ஆங்கில மொழியறிவையும் வளர்த்துக் கொண்டதன் பயனாக அனைத்துலக இலக்கியங்களை ஆழப்பயிலும் வாய்ப்பினையும் பெற்றார். ஈரோடு மதரசா உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக சில ஆண்டுகள் பணியாற்றிய தமிழன்பன் சென்னை புதுக்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றினார். ஈடுபாட்டுடன் கூடிய பல்லாண்டு காலத் தமிழாசிரியர் பணி இவரின் தமிழ்ப்புலமை ஆழம்காண அடித்தளமிட்டது.

'தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனை, கார்ல் மார்க்சின் பொதுவுடைமைச் சிந்தனை, பாப்லோ நெருடாவின் மனிதநேயம், வால்ட்விட்மனின் புதுமை வேட்கை, பாரதியாரின் கவிதா ஆவேசம், பாரதிதாசனின் தமிழ் உணர்வு ஆகியவற்றின் குறியீடாக அமைந்து தன் பிறந்தகமான சென்னிமலையின் நெசவுத் தறிகளின் ஓசைகளிலிருந்து சந்தங்களைச் சேகரம் செய்து கொண்டு தனக்கெனத் தனித்துவமான கவிதைப் பாட்டையை அமைத்துக் கொண்டு அதில் நடைபோட்டு வருபவர் தமிழன்பன்' என்று 2005இல் வரையறுத்துக் கூறியுள்ளார் பேராசிரியர் வ.ஜெயதேவன்.

'வானம்பாடி' கவிதா இயக்கத்தில் கானம் பாடியவர் இவர். சமூக நீதிக் கருத்துகளையும் சமூக மாற்றச் சிந்தனைகளையும் தனது இரு கண்களாகக் கருதி இயங்கி வந்தவர். பாரதி, பாரதிதாசன் வழிவந்தவர். 'பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள்' என்ற இவரது நூல் இவருக்கும் பாவேந்தருக்குமான கருத்து நெருக்கத்தைப் பறைசாற்றுகிறது.

இவரின் இரண்டு மகன்களின் பெயர்களே இவரை இனம் காட்டுகிறது. ஒருவரது பெயர் 'பாப்லோ நெருடா' இன்னொருவர் பெயர் 'பாரதிதாசன்'.

'நமது சிறகசைப்பில் ஞால நரம்பதிரும்! இமயப் பறவைகள் நாம்! எரிமலையின் உள்மனம் நாம்! அக்கினிக் காற்றில் இதழ்விரிக்கும் அரும்புகள் நாம்! திக்குகளின் புதல்வர்கள்! தேசவரம் பற்றவர்கள்!'

என்பது போன்ற இளைஞர்களைத் தட்டியெழுப்பும் வைர வரிக் கவிதைகள் இவரின் தனித்துவம். வெறும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்

உவமைகளல்ல. புரட்சியைத் தூண்டும் சொற்பூக்கள் அவையென்று தமிழன்பனின் முழுக்கவிதைகளைப் படித்த எவரும் எளிதில் உணரமுடியும்.

பள்ளி ஆசிரியர், கல்லூரிப் பேராசிரியர், மரபுக் கவிஞர், புதுக்கவிதைக் கவிஞர், கவியரங்கக் கவிஞர், கவிதை ஆக்கங்களில் பல்வேறு புதுமைகளைப் புகுத்திய புதுமைக் கவிஞர், சிறுகதை ஆசிரியர், நாடக ஆசிரியர், சிறார் இலக்கியப் படைப்பாளி, சொற்பொழிவாளர், திரைப்படப் பாடலாசிரியர் என்ற பன்முகப் படைப்பாளுமையுடன் வீறுநடை போட்ட வித்தகர் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

'பழந்தமிழிலக்கியப் புலமை மற்றும் யாப்பியல் ஆளுமை என்பவற்றோடு கவிதையுலகில் அடிபதித்து, நவீன காலச் சூழலின் தேவைகளுக்கேற்ப புதுமைகளை உள்வாங்கிக் கொண்டு, தமிழ்க் கவிதை வரலாற்றை முன்னெடுத்துச் செல்லும் ஒரு வரலாற்று மனிதராகவே-வரலாற்றை இயக்கி நிற்கும் சக்தியாகவே அவர் கணிக்கப்பட வேண்டியவராகிறார்' என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன் வரையறை செய்துள்ளார்.

ஈரோடு தமிழன்பன் அவர்களது மறைவு தமிழ் உலகிற்கு குறிப்பாக, தமிழ்க் கவிதை உலகிற்கு-பேரிழப்பாகும். அவரின் வழித்தோன்றல்களாக இளம் தமிழ்க் கவிஞர்கள் சிலர் உருவாவதும், அத்தகைய உருவாக்கத்திற்குத் துணை நிற்பதும், அவர் எண்ணி எண்ணிச் செதுக்கிய கவிதைகளின் உள்ளடக்கமான புதியதோர் சமூக அமைப்பை ஏற்படுத்த முயலுவதுமே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.



















இலக்கியவாழ்க்கை

ஈரோடு தமிழன்பன் பள்ளி மாணவனாக இருந்தபோதே 'சுய சிந்தனை' என்ற கையெழுத்துப் பிரதியை நடத்தியிருக்கிறார். முதல் கவிதை நூல் 1968-ல் 'கொடி காத்த குமரன்' 'வில்லுப்பாட்டு'. விடிவெள்ளி, 'மலையமான்' என பல புனைபெயர்களில் எழுதியபின் தமிழன்பன் என்னும் பெயர் நிலைத்தது.

பாரதிதாசனுடன் பத்தாண்டுகள் (1954 முதல் 1964 வரை) பழகிய அனுபவம் கொண்டவர். 'நெஞ்சின் நிழல்கள்' என்னும் நாவல் பாரதிதாசன் பரிந்துரையால் சென்னை பாரி நிலையத்திலிருந்து 1965-ல் வெளியானது. ஆனால் தொடர்ந்து புனைவுகள் எழுதாமல் கவிஞராகவே நிலைகொண்டார். பாரதிதாசன் பரம்பரை கவிஞராக மரபுக்கவிதைகளை

எழுதிவந்தவர் வானம்பாடி கவிதை இயக்கம் தொடர்புக்குப்பின் புதுக்கவிதையில் ஈடுபட்டார்.

ஈரோடு தமிழன்பன் ஜப்பானிய கவிதை வடிவங்களான ஹைக்கூ, சென்ரியூ ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவர். ஒரு வண்டி சென்ரியு (2001) என்னும் தொகுதி அந்த வடிவை தமிழில் அறிமுகம் செய்தது. லிமெரிக், ஹைகூ ஆகிய கவிதை வடிவங்களை இணைத்து டெட் பாக்கர் அறிமுகப்படுத்திய கவிதை வடிவமான லிமெரைக்கூவைச் சென்னிமலைக் கிளியோபாத்ராக்கள் (2002) என்னும் கவிதைத் தொகுதி வழியாக தமிழில் அறிமுகம் செய்தார்.

ஈரோடு தமிழன்பன் 60க்கும் மேற்பட்ட கவிதைத்தொகுதிகளையும், 6 பெருந்தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.

விருதுகள்... பட்டங்கள்... பரிசுகள்

1. 1964 ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவை அளித்த தங்கப்பதக்கம்
2. 1973 தமிழன்பன் கவிதைகள் எனும் சிறந்த நூலுக்காகத் தமிழக அரசு வழங்கிய முதல் பரிசு
3. 1991 தமிழக அரசு அளித்த பாரதிதாசன் விருது
4. 1996 அமெரிக்காவில் வாசிங்டன்-பால்டிமோர்த் தமிழ்ச் சங்கம் வழங்கிய புதுக்கவிக்கோ விருது
5. 1997 ஒரு மழை நாளில் எனும் சிறந்த சிறுகதைப் படைப்பிற்காக பாரத ஸ்டேட் வங்கி வழங்கிய முதல் பரிசு
6. 1998 முரசொலி அறக்கட்டளை அளித்த கலைஞர் விருது
7. 1999 தமிழக அரசு நல்கிய கலைமாமணி விருது
8. 1999 ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவை வழங்கிய இராணா இலக்கிய விருது
9. 2000 பனி பெய்யும் பகல் எனும் சிறந்த கவிதை நூலுக்காகத் தமிழக அரசு வழங்கிய முதல் பரிசு
10. 2001 பாரதிதாசனோடு பத்தாண்டுகள் எனும் நூலுக்காகப் பாவேந்தர் பாசறை அளித்த முதல் பரிசு
11. 2001 தமிழக அரசு அளித்த குறள் பீட விருது
12. 2002 கரந்தைத் தமிழ்ச் சங்கம் வழங்கிய தமிழவேள் உமாமகேசுவரனார் விருது
13. 2003 ஒரு வண்டி சென்ரியு எனும் சிறந்த நூலுக்காகத் திருப்பூர்த் தமிழ்ச் சங்கம் வழங்கிய முதல் பரிசு
14. 2003 செய்யாறு தமிழ்ச் சங்கம் வழங்கிய கவிப்பேரருவி விருது
15. 2004 சேலம் தமிழ்ச் சங்கம் வழங்கிய தமிழ் வாகைச் செம்மல் விருது
16. 2004 வணக்கம் வள்ளுவ! என்னும் கவிதை நூலுக்காகச் சாகித்திய அகாதெமி அளித்த விருது

17. 2004 சிற்பி இலக்கிய விருது

18. 2005 திராவிடர் கழகம் நல்கிய பெரியார் விருது

19. 2005 தஞ்சை பாரத் கல்வி நிறுவனக் குழுமம் வழங்கிய கவிஞானி விருது

20. 2008 அமெரிக்க மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் அளித்த வாழ்நாள் சாதனையாளர் விருது

21. 2008 சென்னைக் கம்பன் கழகம் வழங்கிய விருது

22. 2010 தமிழ்நாடு புத்தகப் பதிப்பாளர்-விற்பனையாளர் சங்கம் (BAPASI) வழங்கிய கலைஞர் பொற்கிழி விருது

23. 2011 விடியல் (Dawn) அமைப்பு அளித்த பாரதி விருது

24. 2011 கவிக்கோ விருது

25. 2014 கவிமுகில் அறக்கட்டளை-விழிகள் பதிப்பகம் வழங்கிய கவிப்பேரிமையம் விருது

26. 2016 விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வழங்கிய செம்மொழி ஞாயிறு விருது

27. 2017 அமெரிக்க மெட்ரோப்பிளக்ஸ் தமிழ்ச் சங்கம் வழங்கிய மகாகவி விருது

28. 2017 எஸ். ஆர். எம். பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராயம் வழங்கிய பரிதிமாற்கலைஞர் விருது

29. 2017 தினத்தந்திக் குழுமம் வழங்கிய சி. பா. ஆதித்தனார் மூத்த தமிழறிஞருக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது

30. 2018 தமிழ்நாடு ஊடகவியலாளர் சங்கம் வழங்கிய ஊடகச் சிற்பி விருது

31. 2019 இந்தியச் சமுதாய மக்களாட்சியக் கட்சி (S.D.P.I.) வழங்கிய கவிக்கோ விருது

32. 2019 தமிழ்ச் செய்தி வாசிப்பாளர் சங்கம் வழங்கிய கவிச்செம்மல் விருது

33. 2020 உலகத் தமிழ் ஹைக்கூ மன்றம் வழங்கிய பாஷோ விருது

ஆய்வுநூல்கள்,தொகைநூல்கள்

- 1996 ,தமிழன்பனும் தமிழும் , சுந்தரபெருமாள் கோயில் ந.இராமலிங்கம் ,
- 2005தமிழன்பன் படைப்பும் பார்வையும் , கோவை ஞானி , சென்னை: மணிவாசகம் பதிப்பகம்
- 2005 கலாநிதி நா. சுப்பிரமணியன், திறனாய்வு நோக்கில் ஈரோடு தமிழன்பன், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- 2007 ஈரோடு தமிழன்பன் படைப்புகளில் நடையியல் , முனைவர் தி.முருகன் , சென்னை : தி பார்கர் வெளியீடு

- 2007 தமிழன்பன் படைப்புகளில் சமுகம், பேரா. சொக்கலிங்கம், நாட்டுச்சாலை : காந்தி பதிப்பகம்
- 2007 தமிழன்பன் படைப்புகளில் பெண்ணியம் , முனைவர் தெ.வாசுகி இளவரசு, சென்னை : தி பார்கர்
- 2007 பாப்லோ நெருதாவும் தமிழன்பனும் , பா. குணசேகரன், சென்னை: கவிதா பதிப்பகம்
- 2007 வ. ஜெயதேவன் & ய. மணிகண்டன், ஈரோடு தமிழன்பன்: கவிதைப் பரிமாணங்கள்-தொகுதி 1,சென்னை: இலக்கிய வீதி.
- 2007 வ. ஜெயதேவன் & ய. மணிகண்டன் (ப. ஆ.), ஈரோடு தமிழன்பன்: கவிதைப் பரிமாணங்கள்-தொகுதி 2, சென்னை: இலக்கிய வீதி.
- 2007 மறைமலை, இ., அங்கதத்திற்கு ஒரு தமிழன்பன், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- 2009 தமிழன்பன் படைப்புகளில் உத்திகள்,முனைவர் இராஜாராம் , திருச்சி: பார்த்திபன் பதிப்பகம்
- 2012 வ. ஜெயதேவன் (ப. ஆ.),ஈரோடு தமிழன்பன்: சில பதிவுகள், சென்னை: துர்க்கா பதிப்பகம்.
- 2012 ஈரோடு தமிழன்பன் கவிதையாக்கம்: சில தடத்தெரிவுகள், சென்னை: விடிவெள்ளி வெளியீடு.
- 2014அமிர்தகணேசன், தி. தமிழன்பன் ஒரு மகாகவி, புதுச்சேரி: சபானந்தாச்சார்யா பதிப்பகம்.
- 2014தமிழென்(ண்)பது தமிழன்பன் , பா. இரவிக்குமார், தி. அமிர்தகணேசன், சீனு. தமிழ்மணி , புதுச்சேரி: சபானந்தாச்சார்யா பதிப்பகம்
- 2014 கவிதையின் அழியாத காதலன் , பேரா .பா .ரவிக்குமார் , சென்னை: விழிகள் பதிப்பகம்
- 2001 Methods & meanings in Tamilanban, Prof SA Sankaranarayanan , Chennai: Marutha Publication.
- 2003 V. Jayadevan & Y. Manikandan (Eds.) The Frontiers of Tamilanban Poetry, Chennai: Vizhigal Pathippagam.
- 2012 Universal Vision And Dialogue With kTradition In Tamilanban's Poetry , Dr. K. Chellappan , Chennai , NCBH
- 2014 Dr. Maraimalai Ilakkuvanar, Tamilanban: Philosopho Fanaticism, Chennai: Vizhigal Pathippagam.

- 2012 Blood and sweat in a capsule, Dr. Maraimalai Ilakkuvanar, Chennai , Nokku
- 2019 Dimensions of Erode Tamilanban , T. Amirthaganesan (Ed) , Pondicherry: Oruthulik Kavithai.

படைப்புகள் : (கவிதைகள்)

1.1968 கொடி காத்த குமரன் (சிறார் வில்லுப்பாட்டு),
2.1970 சிலிர்ப்புகள் (வசன கவிதைகள்), சென்னை: பாரி நிலையம்.
3. 1970 தமிழன்பன் கவிதைகள் (கவிதைகள்), சென்னை: மங்கள நூலகம்.
4.1973 தோணி வருகிறது (கவிதைகள்), சென்னை: மணிவாசகர்பதிப்பகம்
5.1973 விடியல் விழுதுகள் (கவிதைகள்), சென்னை: பொதிகைப் பதிப்பகம்.
6.1978 தீவுகள் கரையேறுகின்றன (கவிதைகள்), சென்னை பாப்லோ நெருடா பதிப்பகம்.
7.1982 அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம் (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
8.1982 பரணி பாடலாம் (கவிதைகள்), சென்னை : பூம்புகார் பதிப்பகம்.
9.1982 காலத்திற்கு ஒரு நாள் முந்தி (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
10.1984 ஊமை வெயில் (கவிதைகள்), சிவகங்கை: அன்னம்.
11.1984 நிலா வரும் நேரம் (கவிதைகள்), சென்னை: நர்மதா பதிப்பகம்.
12.1985 சூரியப் பிறைகள் (ஹைக்கூக் கவிதைகள்), சென்னை: நர்மதா பதிப்பகம்.
13.1985 திரும்பிவந்த தேர்வலம் (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
14.1986 கருவறையிலிருந்து ஒரு குரல் (கவிதைகள்), சென்னை:

திருமகள் நிலையம்.
15.1989 நாமிருக்கும் நாடு (கவிதைகள்), சென்ன: பாப்லோ பாரதிபதிப்பகம்.
16.1989 ஊர் சுற்றிவந்த ஓசை (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
17.1990 கண்ணுக்கு வெளியே சில கனாக்கள் (கவிதைகள்), சென்னை: நர்மதா பதிப்பகம்.
18.1990 குடைராட்டினம் (சிறார் கவிதைகள்), சென்னை: கிறித்தவ இலக்கியச் சங்கம்.
19.19.1991 கிழக்குச் சாளரம் (கவிதைகள்), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.
20.1995 என் வீட்டு எதிரே ஒரு எருக்கஞ்செடி (கவிதைகள்), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.
21.1998 நடை மறந்த நதியும் திசை மாறிய ஓடையும் (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
22.1998 பனி பெய்யும் பகல் (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
23.1999 உன் வீட்டிற்கு நான் வந்திருந்தேன்... வால்ட் விட்மன்! (தமிழ்ப் புதுக்கவிதையிலான பயண நூல்), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.
24.1999மின்மினிக்காடு (கவிதைகள்), சென்னை: மருதா பதிப்பகம்.
25.2000 வணக்கம் வள்ளுவ! (சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிதைப் படைப்பு), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
26.2001 ஒரு வண்டி சென்ரியு (முதல் தமிழ் சென்ரியுக் கவிதைத் தொகுதி), சென்னை: மருதா பதிப்பகம்
27.2002 தமிழோவியம் (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
28.2002 சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள் (முதல் தமிழ் லிமரைக்குக் கவிதைத் தொகுதி), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்
29.2002 வார்த்தைகள் கேட்ட வரம் (கவிதைகள்), சென்னை: விழிகள் பதிப்பகம்.

30.2003 இவர்களோடும் இவற்றோடும் (கவிதைகள்), சென்னை: விழிகள் பதிப்பகம்.

31.2003 இரவுப் பாடகன் (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

32.2004 கனாக் காணும் வினாக்கள் (வினாக்களாலான முதல் தமிழ்க் கவிதைத் தொகுதி), சென்னை: விழிகள் பதிப்பகம்.

33.2004 மின்னல் உறங்கும்போது (கவிதைகள்), சென்னை: துர்க்கா பதிப்பகம்.

34.2005 கதவைத் தட்டிய பழைய காதலி (கவிதைகள்), சென்னை: விழிகள் பதிப்பகம்.

35.2005 கவின் குறுநூறு (கவிதைகள்), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.

36.2005 அன்னை மடியே உன்னை மறவேன் (கவிதைகள்), சென்னிமலை: பாலமுருகன் பதிப்பகம்.

37.2006 மூன்று பெயர்களும் என் முகவரிப் புத்தகமும் (கவிதைகள்), சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

38.2008 இடுகுறிப் பெயரில்லை இஸ்லாம் (கவிதைகள்), சென்னை: ரஹ்மத் பதிப்பகம்.

39.2008 சொல்ல வந்தது (கவிதைகள்), சென்னை: அன்னை முத்தமிழ்ப் பதிப்பகம்.

40.2009 ஓலைச்சுவடியும் குறுந்தகடும் (கவிதைகள்), சென்னை: விடிவெள்ளி வெளியீடு.

41.2009 என் அருமை ஈழமே! (கவிதைகள்), சென்னை: அன்னை முத்தமிழ்ப் பதிப்பகம்.

42.2011 கதை முடியவில்லை (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

43.2011 கனவின் சில பக்கங்கள் (கவிதைகள்), சென்னை: அன்னை முத்தமிழ்ப் பதிப்பகம்.

44.2012 கஜல் பிறைகள் (முதல் தமிழ்க் கஜல் கவிதைத் தொகுதி), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.

45.2013 மழை மொக்குகள் (யோரன் குறள்) (குறட் பாக்கள்), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.

46.2013புத்தகம் என்பது , (கவிதைகள்)சென்னை , விழிகள் பதிப்பகம்

47.2014 ஒரு கூடைப் பழமொன்ரியு (பழமொழி, சென்ரியு இணைந்த முதல் தமிழ்க் கவிதைத் தொகுதி), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.

48.2014 தத்துபித்துவம் (கவிதைகள்), சென்னை: விழிகள் பதிப்பகம்.

49.2015 புதுநெறி காட்டிய புரட்சிக் கவிஞர் (கவிதைகள்), சென்னை: விழிகள் பதிப்பகம்.

50.2015 இன்னும் சில வினாக்கள் (கவிதைகள்), சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்.

51.2015 திசை கடக்கும் சிறகுகள் (கவிதைகள்), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

52.2016 ஐந்திணை ஹைகூ , (கவிதைகள்) ,சென்னை: பாப்லோ பாரதி பதிப்பகம்

53.2016 இரு சுடர்கள், (கவிதைகள்) ,சென்னை : பாப்லோ பாரதி பதிப்பகம்

54.2017 மாற்று மனிதம் , (கவிதைகள்) ,சென்னை பூம்புகார் பதிப்பகம்)

55.2017 வள்ளிச்சந்தம் , (சிறார் பாடல்கள்) ,சென்னை : பாரதி புத்தகாலயம்

56.2018 பூக்களின் விடைகள் புலரி கைகளில் , (கவிதைகள்) ,புதுச்சேரி: ஒருதுளிக்கவிதை

57.2018 சிறுசிறு சூரியர்கள் , (கவிதைகள்) ,புதுச்சேரி: ஒருதுளிக்கவிதை

58.2018 இசை அமைக்கும் இமை அசைப்புகள் , (இசைக் கவிதைகள்) புதுச்சேரி: ஒருதுளிக்கவிதை

59.2019 ஒரு கவளம் சோறும் ஒரு கவிதையும் , (கவிதைகள்) ,சென்னை : அரிமா நோக்கு வெளியீடு

60.2019 நட்பூ , (கவிதைகள்)சென்னை :பாப்லோபாரதி பதிப்பகம்

61.2020. இன்னிசை அளபெடைச்சென்னிமலை (கவிதைகள்), புதுச்சேரி , ஒருதுளிக்கவிதை ,

62.2020 ஞாபகச் சாளரம் , (கவிதைகள்) ,புதுச்சேரி , ஒருதுளிக்கவிதை ,

63.2020 இன்னும் இசை உண்டு இந்த வீணையில், (கவிதைகள்) ,புதுச்சேரி , ஒருதுளிக்கவிதை ,
64.2020 முகமொழி 100 , (கவிதைகள்) ,புதுச்சேரி , ஒருதுளிக்கவிதை ,
65.2020 ஒளியின் தாயகம் ஒப்பிலா நாயகம், (கவிதைகள்) ,புதுச்சேரி , ஒருதுளிக்கவிதை ,
66.2020 காலத்தால் மறையாத கருப்புச் சூரியன் (கவிதைகள்) , புதுச்சேரி , ஒருதுளிக்கவிதை ,

மொழிப்பெயர்ப்புகள்

1. 2011 பாப்லோ நெருதா கவிதைகள் (தமிழாக்கம்), சென்னை: பாரதி புத்தகாலயம்.
2. 2012 ஜப்பானிய ஹைகூ 100 குறிப்புரையுடன் (தமிழாக்கம்), சென்னை: விழிகள் பதிப்பகம்.
3. 2019 இறக்குமதி (பன்மொழி ஆக்கம் , ஆங்கிலம்வழி) சென்னை , நோக்கு வெளியீடு ,

Translations :(Poems) English

1. 2000 Glow Worm Woods, S.A.Sankaranarayanan (Tr.), Chennai:Marudha.
2. 2002 Whitman to Thine house I Came, S.A. Sankaranarayanan (Tr.),Chennai: Pablo-Bharathi.
3. 2002 Salutations Valluva!, S.A.Sankaranarayanan (Tr.), Chennai: Pablo-Bharathi.
4. 2003 Night Singer, K. Chellappan & N. Ramachandran (Tr.), Chennai: Pablo-Bharathi.
5. 2003Comely Gemstones Jewels , Prof SA Sankaranarayanan , Chennai ,Kal Thachhan.
6. 2013 Ghazal Crescents, S.A. Sankaranarayanan (Tr.), Chennai: Nokku.
7. 2013 Rainbuds, S. A. Sankaranarayanan (Tr.), Chennai: Pablo-Bharathi.
8. 2014 Sanity-In-Zealotry, S.A. Sankaranarayanan (Tr.), Chennai: Vizhikal Pathippakam.8.
9. 2016 Two Flames, S.A. Sankaranarayanan (Tr.), Chennai: Pablo-Bharathi.
10. 2017 What the Sun Said Last & other Poems, K. S. Subramanian (Tr.), New Delhi: Sahitya Akademi.
11. 2017 A book is.., A. Ayyasamy (Tr.), Chennai: Vizhikal Pathippakam.

12. 2017 Ainthinai Haiku, S.A.Sankaranarayanan (Tr.), Chennai: Pablo-Bharathi.
13. 2017 The Essential Erode Tamilanban, T. Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai.
14. 2017 Questions in reverie, S. A. Sankaranarayanan (Tr.), Pondicherry: Oruthulik Kavithai.
15. 2018 Poems of Questions, Gregory James (Tr.), Chennai: Arimaa Nokku.
16. 2018 The Answers of Flowers in the hands of the Dawn, T. Amirthaganesan (Tr.), Pondicherry: Oruthulik Kavithai.
17. 2019 Micro Suns , T. Amirthaganesan (Tr.), Pondicherry: Oruthulik Kavithai.
18. 2019 Lyrics set to Music by Lids of Eyes T. Amirthaganesan (Tr.), Pondicherry: Oruthulik Kavithai.
19. 2019 Gregory James (Tr.), Glow-worm Woods, Chennai: Arimaa Nokku.
20. 2019 A Morsel of Rice and a Poem, S.A. Sankaranarayanan (Tr.), Chennai: Arimaa Nokku.
21. 2020 Innisai Alapedai ch Chennimalai ,S.A. Sankaranarayanan (Tr.), Pondicherry: Oruthulik Kavithai
22. 2020 Flowers of Friendship , Prof. Akilan Ethiraju , Oruthulik Kavithai, Pondicherry

Translations : (Other Languages) Hindi

1. 2017 Vaikalpiktha Manavatha mae (Hindi), R. Sowrirajan & B. Parameswari (Tr.), Chennai: Vizhikal Pathippakam.
2. 2017 Gazhals (Hindhi) H. Balasubramanian , Pondicherry: Oruthulik Kavithai.
3. 2017 Tamilanban's poems (Hindi), Dr. Vijayalakshmi ,(Tr.) Pondicherry: Oruthulik Kavithai. Spanish
4. 2017Multilingual Edition , T Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai. Spanish:Dr. Srivani Tumu
5. 2019 Gregory James & Loraine Bock (Tr.), Poemas de Preguntas (Spanish), Chennai: Arimaa Nokku.

German

Multilingual Edition , T Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai.: Vatchala Vijayakumar & Cheralathan Panneerselvan.

French

Multilingual Edition , T Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai.:Aishwarya Baskaran

Mandrin

Multilingual Edition , T Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai.: Aishwarya Baskaran

Chinese

Multilingual Edition , T Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai.: Aishwarya Baskaran

Arabic

Multilingual Edition , T Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai.: Aishwarya Baskaran

Urdu

Multilingual Edition , T Amirthaganesan (Comp.), Pondicherry: Oruthulik Kavithai.:Nariyampattu M.A Salam

படைப்புகள் <:> (உரைநடை)

https://erodetamilanban.com/%e0%ae%aa%e0%af%81%e0%ae%a4%e0%af%8d%e0%ae%a4%e0%ae%95%e0%ae%99%e0%af%8d%e0%ae%95%e0%ae%b3%e0%af%8d/

1. 1967 கவி பாடின காவலர் (சிறார் கதைகள்), சென்னை: பாலரவி கம்பெனியார்
2. 1968 கரும்புச்சுவைக் கதைகள் (சிறார் கதைகள்), சென்னை: பாலரவி கம்பெனியார்
3. 2001 கண்மணிக்குச் சில கதைகள் என்ற பெயரில் சென்னை: விழிகள் பதிப்பகம்)
4. 1965 நெஞ்சின் நிழல் (புதினம்), சென்னை: பாரி நிலையம்.
5. 1965 தாயின் மணிக்கொடி (கட்டுரைகள்), ஈரோடு சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம்
6. 1987 தனிப்பாடல் திரட்டு – ஓர் ஆய்வு (முனைவர் பட்ட ஆய்வேடு – சென்னைபாப்லோபாதிப்பகம்
7. 1988 சிகரங்கள் மேல் விரியும் சிறகுகள் (கட்டுரைகள்), சென்னை திருமகள்நிலையம்
8. 1990 என்னைக் கவர்ந்த பெருமானார் (சொற்பொழிவுத் தொகுப்பு), சென்னை: இஸ்லாமிய அறக்கட்டளை நிறுவனம்.
9. 1990 கவிதைச் சிந்தனைகள் (கட்டுரைகள்), சென்னை பயன்பதிப்பகம்
10. 1992 இலக்கியப் பயன் (கட்டுரைகள்), சென்னை: பயன் பதிப்பகம்.
11. 1994 புரட்சிக் கவிஞர் கவிதைகளில் தமிழ், தமிழன், தமிழ்நாடு

(சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்திய அறக்கட்டளைச் சொற்பொழிவுத்தொகுப்பு), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

12. 1995 ஒரு மழை நாளில் (சிறுகதைகள்), சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.

13. 1999 அணைக்கவா என்ற அமெரிக்கா (பயண இலக்கியம்), சென்னை : பூம்புகார் பதிப்பகம்.

14. 2000 பாரதிதாசனோடு பத்து ஆண்டுகள் (உரைநடை), சென்னை: விழிகள் பதிப்பகம்.

15. 2001 கலையா? கைவினையா? (கட்டுரைகள்), சென்னை: மருதா.

16. 2002 மதிப்பீடுகள் (கட்டுரைகள்), சென்னை: மருதா.

17. 2002 ஈர நெருப்பு (நாடகங்கள்), தஞ்சாவூர்: அய்யா நிலையம்.

18. 2006 தேம்சு நதியில் தேன் தமிழ் அலைகள் (உரைநடை), சென்னை பிரேமாபதிப்பகம்

19. 2007 பாப்லோ நெருதா பார்வையில் இந்தியா, சென்னை: பாப்லோ நெருதா ஸ்பானிய-லத்தீன் அமெரிக்க ஆய்வு நிறுவனம்.

20. 2007 ஈரோடு தமிழன்பன் பார்வையில் டேக்வாண்டா (தற்காப்புக்கலை) காஞ்சிபுரம் மாவட்டம் , டேக்குவாண்டா சங்கம்

21. 2008 கணைகளும் கனிகளும் (உரைநடை), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

22. 2010 கண்கள் கடந்த காகித வீதிகள் (உரைநடை), சென்னை: பூம்புகார் பதிப்பகம்.

23. 2013 வீரத் துறவி விவேகானந்தரும் மனோன்மணியம் சுந்தரனாரும் ஒரு சந்திப்பில்...(கட்டுரை), சென்னை: தென்புத்தூர் பதிப்பகம்.

24. 2014 21. வாழ்க்கையின் வெற்றிக்கு வள்ளுவர் (கட்டுரை), சென்னை: தென்புத்தூர் பதிப்பகம்.

25. 2016 கலாம் என்னும் கலங்கரை விளக்கு (வாழ்க்கைவரலாறு), சென்னை : பூம்புகார் பதிப்பகம்

26. 2019 ஹைக்கூ-சென்ரியு ஓர் எளிய கையேடு, வந்தவாசி: அகநி வெளியீடு.

27. 2019தலைவாயில் , (கட்டுரைகள்)சென்னை , அரிமா நோக்கு வெளியீடு.

கவிதை தொகுப்புகள் : (பிறர் உருவாக்கிவை)

1. 2000 திசைக்குள் திசைகள் , (80 களில் வெளி வந்த தமிழன்பனின் கவிதை நூல்களின் தொகுப்பு) சென்னை: மருதா பதிப்பகம்
2. 2003கவின் பரல்கள் (தேர்ந்தெடுத்த கவிதைகள்), முரளி அரூபன் (தொ.ஆ.), சென்னை: கல்தச்சன்.
3. 2007. ஈரோடு தமிழன்பன் கவிதைகள்-தொகுதி 1, : பேரா. வ. ஜெயதேவன்(தொ.ஆ) சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
4. 2007 ஈரோடு தமிழன்பன் கவிதைகள்-தொகுதி 2, : பேரா. வ. ஜெயதேவன்(தொ.ஆ) சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
5. 2007 ஈரோடு தமிழன்பன் கவிதைகள்-தொகுதி 3, : பேரா. வ. ஜெயதேவன்(தொ.ஆ)சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
6. 2007 ஈரோடு தமிழன்பன் கவிதைகள்-தொகுதி 4, : பேரா. வ. ஜெயதேவன்(தொ.ஆ)சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
7. 2007 ஈரோடு தமிழன்பன் கவிதைகள்-தொகுதி 5, : பேரா. வ. ஜெயதேவன்(தொ.ஆ)சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
8. 2009 பூத்தூவும் நேரம் (தேர்ந்தெடுத்த கவிதைகள்), சென்னிமலை தண்டபாணி (தொ.ஆ.), சென்னை: கவிதா பப்ளிகேஷன்
9. 2016 ஈரோடு தமிழன்பன் ஆயிரம் (தேர்ந்தெடுத்த 1000 கவிதைகள்), தி.அமிர்தகணேசன் (தொ. ஆ.), சென்னை: விழிகள் பதிப்பகம்.
10. 2017 மகாகவி ஈரோடு தமிழன்பன் வாழ்வியல் கவிதைகள் (கவிதைகள்), தி. அமிர்தகணேசன் (தொ. ஆ.), புதுச்சேரி: ஒருதுளிக் கவிதை.
11. 2019 ஈரோடு தமிழன்பன் கவிதைகள்-தொகுதி 6, : பேரா. வ. ஜெயதேவன்(தொ.ஆ)சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
12. 2019 குடைக்குள் வானம் (கவிதை நறுக்குகள்) நியுயார்க்சண்முகம் பெரியசாமி, (தொ.ஆ)புதுச்சேரி: ஒருதுளிக் கவிதை.
13. 2020 விடியல் புதிது வெளிச்சம் புதிது, தி.அமிர்தகணேசன் (தொ.ஆ.) (புதிய வகைமைகளின் தொகுப்பு)புதுச்சேரி , ஒருதுளிக்கவிதை

ஈரோடு
தமிழன்பன்

சிறப்பு காணொளிகள்

https://erodetamilanban.com/%e0%ae%95%e0%ae%be%e0%ae%a3%e0%af%8a%e0%ae%b3%e0%ae%bf/

ஒன்பது காணொளிகள்

வலைப்பதிவுகள்

01] மகாகவி ஈரோடு தமிழன்பன் 87ஆம் பிறந்தநாள் விழா சிறப்பு இதழ்

https://erodetamilanban.com/%e0%ae%b5%e0%ae%b2%e0%af%88%e0%ae%aa%e0%af%8d%e0%ae%aa%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%b5%e0%af%81%e0%ae%95%e0%ae%b3%e0%af%8d/%e0%ae%aa%e0%ae%bf%e0%ae%b1%e0%ae%a8%e0%af%8d%e0%ae%a4%e0%ae%a8%e0%ae%be%e0%ae%b3%e0%af%8d-%e0%ae%b5%e0%ae%bf%e0%ae%b4%e0%ae%be/

28.09.2020 அன்று மகாகவி ஈரோடு தமிழன்பன் ஐயா அவர்களுடைய **87**வது பிறந்தநாள் விழா காணொளி வாயிலாக கொண்டாடப்பட்டது. இந்தியா, சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவிலிருந்து நிறைய பேர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி அமெரிக்க தமிழ் வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது.

02] தமிழக அரசின் கலைமாமணி விருது

https://erodetamilanban.com/%e0%ae%b5%e0%ae%b2%e0%af%88%e0%ae%aa%e0%af%8d%e0%ae%aa%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%b5%e0%af%81%e0%ae%95%e0%ae%b3%e0%af%8d/%e0%ae%a4%e0%ae%ae%e0%ae%bf%e0%ae%b4%e0%ae%95-%e0%ae%85%e0%ae%b0%e0%ae%9a%e0%ae%bf%e0%ae%a9%e0%af%8d-%e0%ae%95%e0%ae%b2%e0%af%88%e0%ae%ae%e0%ae%be%e0%ae%ae%e0%ae%a3%e0%ae%bf-%e0%ae%b5%e0%ae%bf/

கலைமாமணி விருது இந்தியாவின் தமிழக அரசினால் ஆண்டுதோறும் கலை மற்றும் பண்பாட்டினை வளர்த்தெடுக்கவும் தொன்மையான கலைவடிவங்களை பேணவும்

கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதாகும். இந்த விருது தமிழ்நாடு அரசின் கலை மற்றும் பண்பாடு இயக்ககத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தினால் 1954 முதல்இ லக்கியம், இசை மற்றும் நாடகத்துறையில் சிறப்பு மிக்கவர்கள் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.


2001ல் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் கலைமாமணி விருதினை பெற்றார்.

03] சாகித்ய அகாதமி விருது

https://erodetamilanban.com/%e0%ae%b5%e0%ae%b2%e0%af%88%e0%ae%aa%e0%af%8d%e0%ae%aa%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%b5%e0%af%81%e0%ae%95%e0%ae%b3%e0%af%8d/%e0%ae%9a%e0%ae%be%e0%ae%95%e0%ae%bf%e0%ae%a4%e0%af%8d%e0%ae%a4%e0%ae%bf%e0%ae%af-%e0%ae%85%e0%ae%95%e0%ae%be%e0%ae%a4%e0%ae%ae%e0%ae%bf/

சாகித்ய அகாதமி இந்திய அரசினால், மார்ச் 12, 1954 இல் துவக்கப்பட்ட ஓர் அமைப்பு. சாகித்திய அகாதமி விருது (Sahitya Akademi Award), சிறந்த இந்திய இலக்கிய படைப்பாளிகளுக்கு, இந்திய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேசிய அளவிலும் மாநில அளவிலும் வழங்கப்படும் மதிப்பிற்குரிய விருதாகும். இருபத்து நான்கு இந்திய மொழிகளில் சிறுகதை, நாவல், இலக்கிய விமர்சனம் போன்ற பலவகையான எழுத்தாக்கங்களிற்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

2004ல் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் "வணக்கம் வள்ளுவ (கவிதைகள்)" எனும் புத்தகம் எழுதியதற்காக சாகித்திய அகாதமி விருதினை பெற்றார்.



தமிழன்பன் ஒரு மகாகவி

நூல் விமர்சனம்

https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-20-13/29939-2015-12-21-06-25-33

தமிழன்பனைப் படிப்பவர் ....கவிதையாவது நிச்சயம்...குறைந்த பட்சம் ஒரு காகிதமாகவாவது...

ஒரு வித போதைக்குள் மிதக்க விட்டு மாயம் செய்யும் ஜாலங்களின் சூட்சுக் குறியீடுகள் அவைகள்......படிக்க விட்டு படைக்க விடும்..அற்புத காகிதங்களின் அண்டாக்கா கசம் கவிதைகள்....

"நான் தூங்கப் போகிறேன்

என்றான் கவிஞன்

நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்

என்றது கவிதை..."

தூக்கி வாரி போடுகிறது எனக்குள்...தூக்கம் தொலைக்கிறேன்.... கவிதை தேடுகிறேன்...

கவிதைக்கும் கவிஞனுக்கும் இருக்கும் இடைவெளியை எப்படி நிரப்புகிறார் பாருங்கள்....

@@@@@@@@@@@

பக்கத்துக்கு பக்கம்... அவர் பற்றிய பிரமிப்புகள்... அவர் காலத்து விரல்கள் நடுங்கிக் கொண்டுதான் எழுதுகின்றன.. அத்தனை உயரம்... அவர் படைப்பு....இத்தனை பெரிய ஆளுமையிடமா இயல்பாக நின்று புகைப்படம் எடுத்தேன்... கணினிக்குள் தேடி மீண்டும் புகைப்படம் பார்த்தேன்... அது நானல்ல... என்பது போல நின்று கொண்டிருக்கிறார்... ஆம்.. அவர்..அவரல்ல. அவர் என்பது கவிதை.. அது காட்டுக்குள் திரியும்... பெயரில்லாத பறவை... கூடில்லாத வெளி. உருகி..... சேர்ந்து..... இணைந்து.... பிடித்து.. அடித்து... இறுக்கி... வளைத்து..... நெளித்து...... கலைத்து...... சலித்து.. செய்யப்பட்ட தமிழின் அன்பு...

கடந்த அக்டோபர் 18ல் சென்னையில் வெளியிடப் பட்ட இந்த புத்தகத்தை தொகுத்தவர் புதுசேரியைச் சார்ந்த... எழுத்தாளர் தி. அமிர்தகணேசன் அவர்கள்...தமிழுக்கு இதை விட ஒரு சேவையை எப்படி செய்ய?, என்பது போல இப்போது என் கையில் தவழும் இந்த புத்தகம்... கேட்கிறது.... அது பொக்கிஷ தூவலாய்.. ஒவ்வொரு பக்கத்திலும்... அற்புதங்களைக் கொண்டு கோர்க்கப் பட்டிருக்கிறது....அந்த வகையில் நாம் திரு அமிர்தகணேசன் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாகத்தான் வேண்டும்.... சிதறிக் கிடந்த நுட்பங்களை அவர் கவிதையில் கோர்த்தார் என்றால்... அவர் படைப்புகள் பற்றிய செய்திகளை நுட்பமாக இவர் கோர்த்திருக்கிறார்...கோர்க்க கோர்க்க பார்க்கும் பரவசம்.... தீர்க்க தீர்க்க உருகும் நவரசம்...

புதுச்சேரியிலுள்ள சபானாந்தாச்சார்யா பதிப்பகம் வெளியிட்ட இந்த புத்தகம்...அறிவுக் களஞ்சியத்தின் கூட்டு என்றால் அது மிகை அல்ல.... நாடறிந்த தமிழன்பனை... இன்னமும்... இளம் படைப்பாளிகள்... படிப்பாளிகளிடம்... விசாலமாக கொண்டு சேர்க்கும் இலகுவான ஈர்ப்பு.....சுருங்கித் தவிக்கும் அறிவுக்கு நிரம்ப தீர்க்கும் இஸ்திரிப் பெட்டி...எப்படி இந்த மனிதனால் இத்தனை எழுத முடிந்தது என்று வியந்து வியந்து.. நெருங்க பயந்து தரிசிக்கிறேன்.... அவர் பற்றிய அறிமுகமே.. ஆழ் கடலைப் போல விழுங்க காத்திருக்கையில்..... இனி அவர் படைப்புகள்... கொன்று வீழ்த்தி.. கவிதையாகி விடும் என்றே நம்புகிறேன்.. கவிதையாவதைத் தவிர கவிஞனுக்கு பேரு வேறு என்ன...?

அறிஞர் பெருமக்கள்... கவிஞர்கள்...கனவான்கள்... என்று வலிமை நிறைந்த பேனாக்களில்.... வழியும் மைகளில்... தமிழன்பனை சொட்டுகிறது... தமிழ்... முத்துக்கள் கவிதை ஆக காத்திருப்பது போல... எனக்குள்.. மிரட்சியை பெருமளவு குவிக்கிறது.... அவர் பற்றிய சிந்தனை... எப்படி இந்த படைப்பாளியை இத்தனை நாள் என் அறிவுக்குள் கொண்டு போகாமல் விட்டேன்... என்று குட்டிக் கொள்ளும் கையில்.. இந்த புத்தகம்... கம்பீரமாய் புரள்கிறது..... வெறி பிடித்த கனவுக்குள்... தமிழ் பேசும்.. வார்த்தைகளை.... கண்டு உணரும் நொடியில்... நிச்சயம் நான் இல்லை.... பின்.... அவர்.....அவர் மட்டுமே.....அவர் உங்களை அவராக மாற்றிக் கொண்டு பின் கவிதையாக மாற்றி விடுவதில்... வல்லவர்... பேசிப்பாருங்கள்.... நல்லவர்...

எதைப்பற்றியும்.... எழுதி இருக்கிறார்.... எதைப் பற்றியும்... எழுதி இருக்கிறார்... அரசியல்... வாழ்வு.. கலாசாரம்.. அன்பு.. காதல்.. காமம்.. நட்பு.. பண்பு... தேடல்.. தொலைதல்.. மரணம்... நம்பிக்கை.. பிறப்பு... உயிர்ப்பு.. கடவுள்... சாத்தான்.. என்று அவர் தேடும் பட்டியல் நீள்கிறது..... நன்றாக படித்தால்.. உங்களைப் பற்றியும் இருக்கலாம்..ஏனெனில் என்னைப் பற்றியும் இருக்கிறது...

பழமையை புதுமைக்குள் சரியாக புகுத்தி விட்ட, மாயம் தெரிந்தவர்.... பார்க்கும் பிழையைக் கூட கவிதையாக்கி சரி செய்துவிடும்.. சூத்திரதாரி.... கடவுளை பிறகு யோசிப்போம்... கவிதையை முதலில் யாசிப்போம்...என்று படிப்பவரை சுயம் தேட வைத்து விடும்...வல்லமைக்காரர்...

இந்திய நெருடா.... தமிழன்பன் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.... இருந்தால்....படித்துப் பாருங்கள்... பின் சரணடைவீர்கள்...

"உயர் சாதிக்காரன் வீட்டில்

ஒரு குழந்தை பிறந்தால்

உச்ச நீதிமன்றத்தில்

ஒரு நாற்காலி

துடைத்து வைக்கப் படுகிறது

ஒடுக்கப் பட்டவன் குடிசையில்

ஒரு குழந்தை பிறந்தால்-அந்த

தாயின் கனவில் புதிதாய் ஒரு

கழிப்பறை திறக்கப் படுகிறது"

-என்று ஒரு கவிதையை காட்டி தமிழன்பன் கவிதைகளில் தலித்தியக் கூறுகளும் கூராகவே இருக்கிறது என்று முனைவர் பா.. ரவிக்குமார் சுட்டிக் காட்டுகிறார்...நிஜமாலுமே சுடுகிறது.... சுட சுட... காயம்.. மெய்யாகி... பொய், கண்ணில் படுகிறது...

சூரியப் பிறைகள் - ஊமை வெயில் - காலத்திற்கு ஒரு நாள் முந்தி - தீவுகள் கரையேறுகின்றன - அந்த நந்தனை எரித்த மிச்சம் - என் வீட்டு எதிரே ஓர் எருக்கஞ்செடி - ஒரு வண்டி சென்ரியூ - கதவைத் தட்டிய பழைய காதலி - தோணி வருகிறது - குடை ராட்டினம் -

தமிழோவியம் - இவர்களோடும் இவற்றோடும் - விடியல் விழுதுகள் - நிலா வரும் நேரம் - நாம் இருக்கும் நாடு - தமிழன்பன் கவிதைகள் - திரும்பி வந்த தேர்வலம் - ஊர் சுற்றி வந்த ஓசை - வார்த்தைகள் கேட்ட வரம் என்று நீளும் அவரின் தலைப்புகளில் பாருங்களேன்.... கவிதைகளை....

தமிழன்பன் வளர்க்கும் எருக்கஞ்செடியை தனக்கு தெரியும் என்று கவிஞர் புவியரசு கூறும் இடத்தில்.....வானம்படி தூக்கி செல்வதாக மிதக்கிறது.. படிப்பவர் வானம்... படித்தவர் வானம் சிதறுகிறது கவிதையை...

"இரைப்பையைக்

காலியாகவே

வைத்திருங்கள்

வந்தே மாதரத்தை

வறுத்துத் தருவார்கள்..." என்ற கவிதையில் வெளிப்படும் தமிழன்பனின் நியாயமான கோபத்தை சுட்டிக் காட்டும் முனைவர் தி. லீலாவதி மானுட ஆன்ம தரிசனமே கவிதை என்கிறார்...ஆன்மாவின் வெளிப்பாடு.... அது உள் நிரம்பிய சூழ்... அது கொண்ட வெளி... கவிதையாவதில் தான்... மனம் வாழ்கிறது...

கோவை ஞானியின் திறனாய்வு...புல்வெளி பூத்த சூரியன்களாய் உருகுகிறது.... உருக்குகிறது...

"பட்டாம் பூச்சிகள்

இல்லாத ஊரில்

வண்ணங்கள் யாரோடு

பேசும்..."

-என்ற தமிழன்பனின் நிறத்துக்கு சிறகு கொடுக்கும் கோவை ஞானி.. நம்மைக் கூட்டிக் கொண்டு போய் காட்டுவது......

"பெயர்களை

மாற்றி வைத்தால்

பூக்கள்

வருத்தப்படுமா" என்று கேள்வியோடு.....திரியும் இன்னொரு தமிழன்பனை... ஆம்... அவரின் நிறம் மாறும்.. வரம் மீறும்... உரம் ஏறும்... கரம் கவிதை வாரும்...

"மகாகவியை நெருங்கி விட்டார்" என்பது கோவை ஞானியின் சொல்... அது... ஞானத்தின் புல்....அது அசையும் மலையில்.... நாம் ஓர் அதி காலையாவதும் அந்தி மாலையாவதும்.. நம் விருப்பம்... விருப்பங்களில்.. நிறைவதில்லை... ஆன்மா... அது பசி கொண்ட புலியின் உருமலில்.. ஒரு தமிழன்பனின் காகிதம் போல கிடக்கிறது...

"எவன் ஒருவன் கவிதையைப் படிக்கும் போது தன்னை மறந்து ஓங்கிய இன்பம் எய்துகிறானோ அவன் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு வரிகூடக் கவிதை எழுதாதவன் ஆயினும் அவனே உண்மைக் கவிஞன் ஆவான்" என்கிறார் ஓர் அறிஞர்... "என்று.. சிலம்பொலி சு. செல்லப்பன் சுட்டிக்காட்டுவது அத்தைய உணருதலை தமிழன்பனின் கவிதைகள் செய்யும் என்பதைத்தான்.....அது உங்கள் கற்பனையின் கற்பனையாக இருக்கிறது... அது உங்கள் நிஜத்தின் நிஜமாக இருக்கிறது....அது உங்களின் தத்துவங்களின் தத்துவமாக இருக்கிறது....

உச்சியில்-

மரணம் , அவற்றின்

பொய்ம்மை நாக்கைப்

புறத்தே

தள்ளியது போலக்

கொடிகள்!"

என்று தமிழன்பனின் வரிகளுக்கு நயம் சேர்க்கிறது.. வல்லிக்கண்ணன் அவர்களின் உரை....தமிழன்பனின் கவிதைகளில் சமூக அரசியல் நோக்குகள் வெளிப்படுகின்றன என்று புகழாரம் சூட்டுகிறார்...கவிதைகளில் அவர் எடுத்துச் சொல்கிற கருத்துகளில் புதுமை வேகமும் புரட்சித் தன்மையும் காலத்தின் தேவையும் ஒலி செய்கின்றன... என்று சுட்டிக் காட்டுகையில்.... அது இன்னும் கூடித்தான் இருக்கிறது என்று சுட்டிக் காட்ட தோன்றுகிறது...

தமிழன்பனின் ஐந்து கவிதைத் தொகுப்புக்கும் முன்னுரை எழுதிய முனைவர் வ. ஜெயதேவன் அவர்கள்... வரிக்கு வரி.. தமிழன்பன் அவர்களை நிரப்புகிறார்..... அது ஒன்றும் மிகை அல்ல..அது சாலச் சிறப்பு... கால நிறைப்பு....

"திருவள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி, அவன் தாசன், என்று தொடரும்- சுடரும் தனித்துவக் கவித்துவ உச்சங்களின் தொடர்ச்சியாக இன்று நம்மிடையே வாழ்பவர் ஈரோடு தமிழன்பன் ஆவார்.." என்று கூறுகிறார்.... அது பொய்யில்லை... நிஜம்... தமிழன்பன் கவிதைகளை உள்வாங்க ஒரு முறை அவரின் மேடைப் பேச்சைக் கேட்க வேண்டும்... இந்த வயதிலும்.. எத்தனை ஆளுமை கொண்ட கர்ஜனை அது...தெளிவான உச்சரிப்புக்கு அவர் உதாரணம் என்று நான் கூற வேண்டியதே இல்லை.. அதை தொலைக்காட்சிக் செய்திகள் சொல்லி விட்டன...... எப்போதோ சிறு வயதில் நான் கண்ட பஞ்சாயத்து டிவிக்களில் செய்திகள் வரும் போது எழுந்து போய் விடும் கூட்டத்தில்... பட்டும் படாமல் பட்ட உருவம் அது என்று இந்நாளைய நினைவுத் தொடர்ச்சியில் நான் பொருத்திக் கொண்டேன்.. பொருந்துவது அவரின் கலை.. தமிழைக் கரைத்து குடித்தவர் என்றால் அது சத்தியம்... கரைத்துக் குடிக்கவும் அவருக்கு சாத்தியம்....

"தமிழன்பனின் மின்மினிக் காட்டில் யார் வேண்டுமானாலும் உள்ளே நுழையலாம்... வழியில் இருட்டு இல்லை.. என்கிறார்... கம்பம் சாகுல் அமீது...

"யார் உடைத்தாலும்

யாழ் உடைந்து விடும்

ஆனால்

யார் மீட்டினாலும்

யாழ் இசை தருமா?"-என்று கேட்ட தமிழன்பன் என்ற கவிதைக்கார ஓவியனிடம் "ஒரு நாள் தூரிகை கேட்டது... என்னை ஏன் வரையவில்லை" என்று.... கவிதைகளின் எளிமையையும் ஆழத்தையும் தத்துவமாக்கிய தமிழன்பனை பற்றி பேசி, அவரை சாட்சிக் கவிதைக்காரன் என்கிறார்... கம்பம் சாகுல் அமீது.

"பாடுபொருளைத் தெரிந்து கொண்ட பின் அதனைக் கட்புல வடிவமாக விரித்துரைக்கும் வித்தகம் இவரது பல கவிதைகளில் ஊடுருவி இருக்கிறது...கவிதையைப் புதிய கோணத்தில் காண முடிவது இதனால்தான்... எதிர்பாராத விதத்தில் கருத்துப் புலப்பாடு கண்முன் விரிவதற்கு காரணமும் அதுதான்..a poet is like a photographer who shoots a subject from an unexpected angle- Alice Schertle என்ற கருத்தோடு பொருந்தி போவதாக முனைவர் இராம. குருநாதன் மகாகவி தமிழன்பனுக்கு மகுடம் சூட்டுகிறார்.... ஆம்.... காட்சிகளின் சதுரத்தை.. கொஞ்சம் மேலும் கீழும் இழுத்து செவ்வக காகிதத்துள் நிரப்பி விடுவதில்... எதிர்வினை பார்வையின் பிம்ப நிழல்... ஒளிந்து கொள்ளலாம்.. மெலிந்து துள்ளலாம்.... கலைந்து அள்ளலாம்...நான் மூன்றும்... மற்றும்.. அடுத்த ஒன்றிலும்... படிந்துக் கிடந்தேன்.. படிமமாய்...என்பதும் அவரே....

"தமிழன்பன் திராவிடச் சிந்தனையில் மலர்ந்து பொதுவுடமைச் சித்தாந்தத்தில் தம்மை ஒப்படைத்து, உலகப் பார்வையில் உலகக் குடிமகனாக உலாவரும் கவிஞராக தம் இருப்பை நிலையாக அடையாள படுத்திக் கொண்டிருக்கிறார்.." என்ற இவரின் கூற்று முற்றிலும் உண்மை என்று முனைவர் தி. லீலாவதி எடுத்துக் கூறும் தமிழன்பனின் இந்தக் கவிதை சான்றளிக்கிறது.....

"உலகனாய் இருக்கும் நான்

நிச்சயமாய் இந்தியன்...

அதைவிடச்

சத்தியமாய்த்

தமிழன்

தமிழனாக இருப்பதற்குத்

தடை போட்டால்

இந்தியனாய்த் தொடர்வது பற்றிச்

சிந்திக்க வேண்டி வரும்...."

எத்தனை பெரிய கேள்விக்கு... இந்த சிந்தனையின் அளவு... நம்மை சார்ந்தது....

தமிழின் மரபின் இரும்புக் கோட்டையிலிருந்து கவிதைக்கு விடுதலை அளித்துப் புதுக் கவிதை படைத்தவர் தமிழன்பன் என்கிராரி ஏ. எஸ். சஜ்ஜாத் புகாரி. ஹைக்கூ, சென்ரியூ, லிமரிக்கூ, வகையில்... கஜலையும் தமிழில்... இயற்றி... இலக்கியக் கொடையாக அளித்திருப்பதாக இவர் கூறுகிறார்... உண்மை...அதை,

"ஆழங்கள் உரையாடக் கரையோரம் வருமா?

வருமென்றால் ஆழமென்ற பெயரையவை பெருமா?" என்று எழுதி...நிரூபிக்கிறார்....தமிழன்பன். திரும்ப திரும்ப நிருபிப்பதில்... திரும்பி நின்று... அரூபமாகிறது... அவரின் வெளி...

"கர்த்தரே, மரணத்தின் முன்கூட ஒரு கடைசிப் போஜனம் உமக்கு இருந்தது... முதல் போஜனத்துக்கு முன்னாலாயே நாங்கள் முடிந்து விடுகிறோம்..." என்று காலம் காலமாக் ஏமாற்றப்பட்டுக் கொண்டே

இருப்பவர்களின் குரலாக தமிழன்பன் குரல் ஒலிக்கிறது... அது மீண்டும் சிலுவையை சுமக்கிறது என்று கூறும்..முனைவர் வ. ஜெயதேவன் தமிழன்பனின் சிலுவையை நம் மீது ஏற்றி விடுகிறார்... சரி.. அவர் மட்டும் சுமக்க சிலுவை என்ன தனி உடமையா... அதுவும் பொது உடமைதானே...? என்று எண்ணத் தோன்றுகிறது...எண்ணங்களின் வழியாக புதுக் கேள்வியை புகுத்தி விடும் அவர்.. கேட்கவும் செய்கிறார்..

"திக்குகளின் புதல்வர்கள்

தேச வரம்பற்றவர்"

என்ற வரிகளில் தமிழன்பனின் சமூக கண்ணோட்டம் பிரகடனப்படுத்தப்படுகின்றது" என்று கூறும் செ. யோகநாதன்...சிந்திக்க வைக்கும் கவிதைகளை கொண்ட அவரை உள் வாங்குங்கள் என்கிறார்....

"கவிதையோடு தொடர்ந்து வாழ்வது என்பது சொல்வதற்கெல்லாம் எதிர்ப்பு தெரிவிக்கும் அழகே வடிவான மனைவியோடு வாழ்வதற்கு ஒப்பானதாகும்" என்று முனைவர் க. பஞ்சாங்கம் தமிழன்பன் பற்றி பேசுகிறார்...ஏறத்தாழ நாற்பது ஆங்கு ஆண்டு காலம் கவிதையோடு வாழ்வதும், பதினைந்து நூல்களை வெளியிடுவதும்.... தமிழன்பனுக்கே சாத்தியம்... என்கிறார்... மேலும் அவரே தொடர்கிறார்... இந்நூற்றாண்டின் கவிஞன் என்பதை நிலை நிறுத்தி விட்டார் என்று துணிந்து கூறலாம் என்றும் கூறும் போது... வியப்புக்குள் செல்லாமல் இருக்க முடியவில்லை...வியக்க வியக்க பார்த்து.... அறிவைத் தணிக்க தணிக்க.....படிக்க... இன்றே தேடுகிறேன்....தெள்ளிய கவிதை நீரோடையில்.... மனதால் முன்னமே நீந்துகிறேன்....

இங்கு பிறந்ததால் தமிழன்பன் ஆனார்.. அங்கு பிறந்திருந்தால் 'நெருடா' வாகி இருப்பார் என்று நானும் துணிந்தே கூறுகிறேன்...

நெருடாவை அதே எரிமலையோடு தமிழுக்கு கொண்டு வந்தவர் தமிழன்பன்... நெருடா, காப்ரியெலின் மீது தீராத பற்று

கொண்டவர்...என்பது குறிப்பிடத்தக்கது.... இருவருமே.. தென் அமெரிக்க சித்தாந்தங்களை மாற்றி அமைத்தவர்கள்.... நெருடாவின் கவிதைகளை "சே".. தன் சட்டை பையில் எப்போதும் வைத்திருப்பார் என்பது.... தோட்டாக்களை கவிதைகளாக்கவும் முடியும் என்பதற்கு சான்று...அந்த மூவரின் நியாயமான கோபங்களும்.... சமுதாய சிந்தனைகளும்... தமிழாய் மாறி விட்ட காலப் பெருமை தமிழன்பனையே சாரும்... பாரதிதாசனின் "கொலைவாளினை எடடா... மிகக் கொடியோர் செயலறவே..."-யின் நீட்சி தமிழன்பன் என்றால் அதுதான் நிஜம்... அந்த வாளின் சொட்டல்.. தமிழன்பன் கவிதையாகி நிற்கிறது.....

"ஒரு பொருள் குறித்து அல்லது ஒருவர் குறித்துக் கடுமையான எதிர்மறையான கருத்தினை, பொறுப்புணர்வின்றி, கண்டன முறையிலான, சூடான விமர்சனத்தை வெளியிட்டு மகிழும் போக்கு இன்றைய தமிழிலக்கிய உலகில் அதிகரித்து வருகிறது.. இங்கும் சாதி உணர்வு, குழு மனப்பான்மை , அரசியல் பகைமை நடைமுறைப் படுத்தப் படுகிறது. ஆதாய நோக்கில் முக்கியமானவர்களை அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களை மிகைப்படியாகப் புகழ்ந்து பிழைப்போர் பெருகி வருகின்றனர்...விருதுகளையும், பணப்பரிசுகளையும் கேட்டுப் பெறுவது, அதற்கென ஆதரவு திரட்டுவது, ஆசை நிறைவேறாத நிலையில் தூற்றுவது, புலம்புவது காட்சி ஆகி வருகிறது...தமிழை முறையாகக் கற்றுத் தெளிந்த படைப்பாளிகளை விரல் விட்டு எண்ணி விடலாம் . வாழ்க்கையை உற்றுணர்ந்து, அதை நேசிக்கும் தமிழ்ப் படைப்பாளிகள் வெகு சிலரே...."- என்று தோழர் ஜீவா ஒரு முறை கூறியதாக ஞாலன் சுப்பிரமணியன் கூறுகிறார்... அவர்களில் தமிழன்பன் கண்டிப்பாக முதன்மையாக இருக்கிறார்.... என்று...தமிழ் கூறுகிறது...

நல்ல படைப்பாளியை இன்னும் கொண்டாடாத தேசமாகவே நம் தேசம் இருக்கிறது.. அதை மாற்றுவோம்.... நல்ல படைப்புகளைக் கொண்டாடுவோம்....தமிழை கொண்டாடுபவனை கொண்டாடினால்தான் தமிழ் வாழும்... வளரும்...ஒரு படைப்பாளி தன்னை உருக்கியே படைப்புகள் நெய்கிறான்...இன்றைய தலைமுறைக்கு... செல்லும் பாதையெங்கும்...தொழில்நுட்பங்கள் இடைவெளி நிரப்பியே இருக்கின்றன...... அது மட்டுமல்லாமல்

அவர்களிடமும்.....ஆர்வம்...சற்று தூரத்திலேயேதான் இருக்கிறது.. கவிதைகள் என்று சிலர் எழுதுவது சகிக்கவில்லை..மூன்று வரிகளை மடக்கிப் போட்டால்.. அது கவிதை ஆகி விடுகிறது.... காதலோடு நின்று போகும் கவிதைகள் சிலருடையது...வீதிக்கு ஒரு கவிஞன் உருவாகட்டும்... ஆனால்... அதற்கான தகுதியை வளர்க்க வேண்டாமா... எழுத ஆசை கொண்டவர்கள் முதலில் படிக்க வேண்டும்... எழுத்து ஜாம்பாவான்களைக் நிரம்பக் கொண்ட மொழி நமது.... எழுதுவதெல்லாம் இலக்கியம் ஆகி விடாது... இலக்கியத்தை எழுதாமல் தமிழ் வளராது...தமிழன்பனின் கவிதைகளை தவிர்த்து உங்களால் கவிதைக்குள் போகவே முடியாது... என்பது கவிதை சத்தியம்...ஆக, படியுங்கள்... அலசுங்கள்... உணருங்கள்... புதிதாக நீங்கள் உங்களை உணர்வீர்கள்... அது.. புது சிறகை உங்களுக்கு கண்டிப்பாக பூட்டும்.. அத்தகைய வானத்தை இந்தப் புத்தகம் ஆங்கங்கே சிதறிப் போகிறது....சிதறிப் போவதே.... சிலிர்க்கிறது என்றால்... சிலிர்த்து கர்ஜிக்கும் எழுத்துக்கள் என்ன செய்யும்...! செய்வதைக் கொண்ட காணுதல்... தமிழன்பனின் வரிகளில்... நீங்கள் கிடைக்கலாம்... நீங்களும் கிடைக்கலாம்.... கிடைப்பது அதுவாக இருப்பதில்.... எதுவும்... அதுவாகி உணரலாம்.... உணர்த்துவது அவராகி அவரே கவிதையான வெளியை கண்டடைதலை.. ஒரு கூடு விட்டு கூடு பாய்தலைப் போல மாயங்கள் நிகத்தி விடுகின்றன...

இப்படி அறிவுப்பெட்டகத்தை திறக்க சொல்லி சாவி கொடுக்கும்... கைகளில் மிதந்து உருவான இந்த " தமிழன்பன் ஒரு மகாகவி " நூலை தொகுத்த ஆசிரியர், எழுத்தாளர் தி. அமிர்தகணேசன் அவர்களுக்கு நாம் நன்றிகளை மீண்டும் கூறியே ஆக வேண்டும்... திறவுகோலின் தத்துவத்தை நான் அறிந்தேன்.... அறிய வேண்டியவர்களுக்கு....

ஆசிரியர் – தி. அமிர்தகணேசன்
சபானந்தாச்சார்யா பதிப்பகம்
புதுசேரி

யுகபாரதி 4 நூல்கள் வெளியீட்டு விழா
ஈரோடு தமிழன்பன் பேச்சு

https://www.youtube.com/watch?v=ZWCaiKOOMuI [26::03]

Poovarasi Awards 2017 :ஈரோடு தமிழன்பன் உரை

https://www.youtube.com/watch?v=vjJBaRWcEw8 [11:41]

தூரங்கள் என்பன...
தமிழன்பன் சிறப்புப் பேட்டி

https://web.archive.org/web/20110724024037/http://thatstamil.oneindia.in/art-culture/essays/2006/tamilanban.html

ஈரோடு தமிழன்பன்..

இவர் பேசுவதே ஒரு கவிதை மாதிரி தான் இருக்கிறது. மழை நேரத்து ஜன்னல் ஓரம் மாதிரி, அத்தனை சுகம்.

தொலைக்காட்சியில் செய்தி வாசித்தாலும், மேடைகளில் கவிதை வாசித்தாலும் இந்த ஈரோட்டுக் கவிஞர் வெறும்வார்த்தைகளை கொட்டுவதில்லை, அதில் கொங்கு நாட்டு செந்தேன் தடவியே தருவார்.

ஜப்பானிய ஹைகூவை தமிழில் தாலாட்டிக் கொண்டிருப்பவர். தமிழில் அதிக அளவில் கவிதைத் தொகுப்புகளைவெளியிட்ட முதல் கவிஞரும் இவர் தான். இவரது படைப்புகள் மொத்தம் 29.

லீமெரிக் எனப்படும் கவிதை வடிவில் தமிழன்பன் ஸ்பெஷலிஸ்ட். தமிழில் லீமெரிக் வகை கவிதைகளைகொண்ட கவிதைத் தொகுப்பை ("சென்னிமலை கிளியோபாட்ராக்கள்") முதன் முதலாக வெளியிட்டார்.

ஒரு பயண நூலையே முழுமையான கவிதை வடிவில் "உன் வீட்டில் நான் வந்திருந்தேன்". என்ற தலைப்பில்கொடுத்த தமிழன்பன், "கனா கண்ட வினாக்கள்" என்ற நூல் மூலம் கேள்விகளால் வேள்வி நடத்தினார்.

கேள்விகளே பதில் தேடுவதாய் அவர் செய்த அட்டகாசமான, வித்தியாசமான முயற்சி அது

.தமிழன்பன் குறித்து சமீபத்தில் ஜெயகாந்தன் ஒரு விழாவில் இப்படிக் கூறினார்:

பாரதியாருக்குப் பின்னர் யாருடைய கவிதைகளையும் நான் படித்ததில்லை. ஆனால் தமிழன்பன் போன்றோர்நல்ல கவிதைகளை

படைக்கிறார்கள் என்பதை அறிந்தபோது, கவிதை வளர்ந்து கொண்டுதான் உள்ளது, நாம் தான்இத்தனை காலம் அவற்றைப் படிக்காமல் விட்டு விட்டோம் என்று கவலைப்பட்டேன்.

இத்தனை சிறப்பு கொண்ட கவிஞர் தமிழன்பன் சமீபத்தில் தனது வணக்கம் வள்ளுவம் என்ற கவிதைத்தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருதை வென்றிருக்கிறார்.

அவரை தட்ஸ்தமிழ் வாசகர்கள் சார்பில் வாழ்த்தி சிறப்புப் பேட்டி கண்டோம்.

அதென்ன வணக்கம் வள்ளுவம்?

கேள்வியை உள்வாங்கிய வேகத்தில் தமிழன்பனிடம் இருந்து அருவியாய் வருகிறது பதில்,

இது ஒரு படைப்பின் மீதான படைப்பு. குறளை அடிப்படையாகக் கொண்ட ஒரு எடுத்துரைப்பு. விவாதங்கள்,நாடகப் பாங்கான கவிதைகள் உள்ளடக்கிய ஒரு நூல். மொத்தம் 22 கவிதைகள்.

குறளில் எனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை வள்ளுவரிடமே விளக்கம் கேட்டுப் பெறும் ஒரு முயற்சிதான் வணக்கம்வள்ளுவம். இதில் வள்ளுவரும் ஒரு பாத்திரமாக வருகிறார், கேள்விகள் கேட்கிறார், உரையாடுகிறார்.

ஒரு குறளில், அறிவிலாதவரின் நட்பு கூடாது என்று வள்ளுவர் கூறுகிறார். அதில் எனக்கு உடன்பாடு இல்லை.நட்புக்கு அறிவை அளவுகோலாக வைக்கலாமா என்பதில் முரண்பாடு எனக்கு. காரணம், அறிவுடையவர் பலர்இன்று உண்மையான நட்புடன் பழகுகிறார்கள் என்று கூற முடியாதே.

எனவே அறிவை அளவுகோலாக வைக்கலாமா என்று வள்ளுவரிடம் கேட்டு விளக்கம் பெறுவதாக ஒருகவிதையில் சொல்லியுள்ளேன்.

இதுபோல குறள்களில் காணப்படும் பல சந்தேகங்களை திறனாய்வு செய்யும் நூல்தான் வணக்கம் வள்ளுவம். இதுகுறளின் மீது எழுதப்பட்ட உரை நூல் அல்ல.

Tamilanbanஒன்னேக்கால் அடியில் குறளைப் படைத்த வள்ளுவருக்கு 2 குழந்தைகள் இருந்தால் எப்படி இருக்கும் என்று ஒருகற்பனை செய்துள்ளேன். அந்த கற்பனையும் கவிதை வடிவமாக இதில் இடம் பெற்றுள்ளது.

திருக்குறளைப் பொருத்தவரை எத்தனையோ பேர் உரை எழுதியிருக்கிறார்கள். இதற்குக் காரணம், குறளின் மூலக்கருத்து யாருக்கும் புரியாமல் போனதால்தான். இன்னும் கூட குறளின் மூலக்

கருத்து புரியாத காரணத்தால்தான்தொடர்ந்து விளக்கவுரைகள் வந்து கொண்டே உள்ளன.

ஒவ்வொருவரும் ஒரு கருத்தை சொல்லி வருகிறார்கள். அந்த கருத்துக்கள்தான் பரவிக் கொண்டு வருகின்றன.ஆனால் மூலம்? அது யாருக்கும் புரிபடவில்லை, மூலத்தைப் புரிந்து கொண்டால் நம்மையேப் புரிந்து கொண்டுவிடுவோம்.

அதேபோல திருக்குறளில் எது முதலில் எழுதப்பட்டது, எது கடைசியில் எழுதப்பட்டது என்பது தெரியாது.அதையும் வள்ளுவரிடம் வினவியுள்ளேன். எது முதலாக இருந்திருக்கும், எது கடைசியாக இருந்திருக்கும்.கடைசிக் குறள் எழுதும்போது வள்ளுவரின் மன நிலை எப்படி இருந்திருக்கும் என்பதை எனது கற்பனையில்கூறியுள்ளேன்.

இந்தக் கவிதைகள் அனைத்தும் முதலில் வள்ளுவம், பின்னர் முத்தாரம் ஆகியவற்றில் தொடராக வெளிவந்தவை.இந்த நூல், ஆங்கிலத்திலும் பேராசிரியர் சங்கரநாராயணன் என்பவரால் "சல்யூடேஷன்ஸ்" என்ற பெயரில்மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்றார் தமிழன்பன்.

இன்றைய கவிதை உலகம் எப்படி உள்ளது?

தமிழன்பன்: இன்றைக்கு நிறையப் பேர் புதுக் கவிதைகள் எழுதுகிறார்கள். இது வரவேற்கப்பட வேண்டியதுதான்.

புதுக் கவிதைகள் எழுதுவது இன்றைய காலத்தின் மரபு. அந்தக் காலத்தில் ஆசிரியப் பா, நிலை மண்டில ஆசிரியப்பா, வெண்பா என்று எழுதினார்கள். அது அந்தக் காலத்தின் கவிதை மரபு.

இப்போது புதுக் கவிதைகள் பெருகி விட்டன, அதனால் மரபுக் கவிதைகள் மறைந்து கொண்டிருக்கின்றன என்றுகூற முடியாது.

கவிதை எழுத ஆர்வம், முயற்சி, பயிற்சி, இடையறாத தேடல் எல்லாம் இருக்க வேண்டும். ஆர்வம் உள்ளஎல்லோருமே கவிதை எழுதலாம். அதே சமயம், கவிதை எழுத தங்களை முழுமையாக தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

ராவண காவியம் என்ற நூலுக்கு பேரறிஞர் அண்ணா முன்னுரை எழுதும்போது, அதை புதுக் கவிதை என்றுதான்அழைத்தார். இத்தனைக்கும் ராவண காவியத்தில் இடம் பெற்றிருந்தவை அனைத்துமே மரபுக் கவிதைகள். எனவேவடிவம் எப்படி இருக்கிறது என்பதை விட அதை பார்க்கும் பார்வைதான் முக்கியம்.

செம்மொழி குறித்து உங்கள் பார்வை என்ன?

அமெரிக்காவைச் சேர்ந்த இலக்கியவாதி நோம் சாம்ஸ்க்கி ஒரு இடத்தில் கூறுகிறார், தொன்மையான, 2,000ஆண்டுகளுக்கும் மேலான பழமையான

ஒரு மொழி, இத்தனை காலமும் அதிக மாறுதல் அடையாமல், சீர்கெடாமல்இருக்கிறதென்றால் அது தமிழ் மட்டும்தான்.

Tamilanbanஇப்படிப்பட்ட தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து கிடைத்ததில் ஆச்சரியமில்லை. நிச்சயம் தமிழ் சிறப்பானமொழிதான். உலகில், பழமையான, அதிகம் மாறுதல்கள் அடையாத மொழிகள் இரண்டு மட்டும்தான். ஒன்று நம்தமிழ், மற்றொன்று தென் ஆப்பிரிக்காவின் சுவாஹிலி.

இவை இரண்டு மட்டுமே இத்தனை காலம் அதிக சிதைவு காணாத மொழிகள் என்றார் தமிழன்பன்.

விடைபெறும்போது, தட்ஸ்தமிழ்.காம் வாசகர்களுக்காக தமிழன்பன் தந்த ஒரு "இன்ஸ்டன்ட்" கவிதை:


இணையம் வழி
இணையும் தமிழர்கள்
இதயம் வழி
இணைவதோடு
இனிய தமிழ் வழியும்
இணைய என் வாழ்த்துக்கள்
தூரங்கள் என்பன,
சமீபங்களின் விரிவுகளே
தவிர,
பிரிவுகள் அல்ல!
பிரிவுகள் என்பன,
உறவுகளின் விரிவுகளே
தவிர
முடிவுகள் அல்ல!

- சுதா(ak.khan@greynium.com)

இந்து தமிழ் திசை

குன்றாத செயலூக்கம்!

https://www.hindutamil.in/news/literature/203632-.html



ஈரோடு தமிழன்பன்
ஆயிரம்
தொகுப்பாசிரியர்:
தி. அமிர்தகணேசன்
விலை: ரூ.700
வெளியீடு:
ஒரு துளிக் கவிதை
புதுச்சேரி-605008
தொடர்புக்கு:
9443360007

'உலராது பெருகும்
உலகின் விழிநீர்த் துடைக்க
ஒரு விரல் தேவை'

- என்றெழுதிய கவிஞர் ஈரோடு தமிழன்பன், கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து தேங்கி நிற்காமல் இயங்கிவரும் செயலூக்கமிக்க படைப்பாளி.

ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் செ.இரா. நடராசன் - வள்ளியம்மாள் தம்பதி யினரின் மகனாக 1933-ல் (செப்டம்பர்-28) பிறந்த செகதீசன், விடிவெள்ளி, மலையமான் என பல புனைபெயர்களில் எழுதத் தொடங்கி, ஈரோடு தமிழன்பனாக நிலைபெற்றார்.

சங்க இலக்கியம் தொடங்கி, சமகாலம் இலக்கியம் வரை ஆழ்ந்த வாசிப்பு, உலக இலக்கியங்களின் மீதான தீராத காதல், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுடன் பத்தாண்டுகள் (1954 முதல் 1964 வரை) பழகிய அனுபவம் போன்றவை ஈரோடு தமிழன்பன் படைப்புத்தளத்தில் தொடர்ந்து செயல்படக் காரணிகளாக அமைந்தன. கவிஞராக அறியப்பட்டிருந்தாலும், சிறுகதை, புதினம், உரைநடை, ஆய்வுரை, சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம் மொழிபெயர்ப்பு என பல தளங்களிலும் தன் எழுத்துப் பணியை உத்வேகத்தோடு செய்துகொண்டேயிருப்பவர்.

பள்ளி மாணவனாக இருந்தபோதே 'சுய சிந்தனை' என்ற கையெழுத்துப் பிரதியை நடத்தியவர். பல்வேறு இதழ்களில் தொடர்ந்து கவிதைகள்

வெளிவந்திருந்தாலும், முதல் கவிதை நூல் 1968-ல் 'கொடி காத்த குமரன்' வில்லுப்பாட்டு நூலாக வந்தது.

இவரது 'நெஞ்சின் நிழல்கள்' புதினத்தை வாசித்த பாரதிதாசன், "ஆகா… எவ்வளவு நல்லா எழுதியிருக்கே. இதை நூலாக வெளியிடணும்" என்று, சென்னை பாரி நிலையத்தில் கொடுக்க, அது 1965-ல் நூலாக வெளியானது.

1985-ல் வெளியான 'சூரியப் பிறைகள்' ஹைக்கூ கவிதை நூலில், ஈரோடு தமிழன்பன் எழுதியிருக்கும் மிக நீண்ட முன்னுரை, ஹைக்கூ பற்றிய புரிதலைப் பலருக்கும் தந்தது. அந்நூலிலுள்ள ஓவியங்களையும் கவிஞரே வரைந்திருப்பார்.

ஹைக்கூ மட்டுமல்ல, சென்ரியு, லிமரிக், புதுக்கவிதையில் பயண இலக்கியம், முழுக்க வினாக்களாலேயே கவிதை, குறள் வெண்பாவில் பேரப்பிள்ளைத் தமிழ், கஜல் பாடல்கள் என புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தமிழுக்குத் தந் துள்ளார்.

50 க்கும் மேற்பட்ட கவிதை நூல்கள், 25-க்கும் மேற்பட்ட சிறுகதை, உரைநடை, ஆய்வு நூல்கள் என்று தன் இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கும் இவரின் படைப்புகளில் பத்துக்கும் மேற்பட்ட நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது கவிதைகள் இந்தி, வங்கம், மலையாளம், ஆங்கிலம், உருது உள்ளிட்ட மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரின் 'வணக்கம் வள்ளுவ' (2000) நூலுக்கு மத்திய அரசின் சாகித்ய அகாடமி விருது கிடைத்தது.

தமிழில் கவிதை இயக்கமாய் மலர்ந்த வானம்பாடிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவரான கவிஞர் ஈரோடு தமிழன்பன், தனது 83-வது வயதிலும் எழுதிகொண்டிருக்கிறார். அவரது பல் லாயிரம் கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட 1,000 கவிதைகள் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழ், தமிழர், தமிழ்ச் சமுதாயம் என்கிற வட்டத்தோடு நின்றுவிடாமல், உலகெங்குமுள்ள மனிதர்களை நேயத் தோடு தழுவிக்கொள்வது ஈரோடு தமிழன்பனின் சிறப்பு.

ஈரோடு தமிழன்பன் ஆயிரம் | தொகுப்பாசிரியர்: தி. அமிர்தகணேசன் | விலை: ரூ.700 | வெளியீடு: ஒரு துளிக் கவிதை | புதுச்சேரி 605008 தொடர்புக்கு: 9443360007

தமிழ் ஏரோடு வந்து படைப்புப் பயிர் செய்தார் ஈரோடு தமிழன்பன்!

https://thiravukol.in/2025/11/23/a-heroic-salute-to-the-poet-erode-thamizhanban/



தமிழ்த்தேசியப் பேரியக்கம் வீரவணக்கம்!

கவிஞர், பேராசிரியர், முனைவர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் நேற்று (22.11.2025) காலமாகிவிட்டார்கள் என்ற செய்தி எனக்கும் பேரதிர்ச்சியைத் தந்தது. அவருக்கு அகவை 92 என்று நண்பர்கள் கூறி, அதிர்ச்சி அடைய வேண்டாம் என்றார்கள். அதிர்ச்சி அடையாமல், துயரத்தை வெளியிடாமல் என்னால் இருக்க முடியவில்லை.

ஈரோடு தமிழன்பன் தஞ்சை கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டம் படித்தவர்; அதன் பிறகு பட்ட மேற்படிப்பு, முனைவர் ஆய்வு முடித்தவர்!

1970 களின் தொடக்கத்தில் கவிஞர் ஈரோடு தமிழன்பன் கவிதைகளைப் படித்து, கிளர்ச்சி அடையும் போது அவர் என்ன படித்தவர் என்பதெல்லாம் என் கவனத்தில் இல்லை. அவரின் உயிர்த்துடிப்பு மிக்க கவிதைவரிகள்தாம் என்னை ஈர்த்தன.

தோழர் இளவேனில் அவர்கள் கார்க்கி என்ற பெயரில் ஓர் இலக்கிய-இடதுசாரி புரட்சி இதழ் நடத்தினார். 1970 களின் தொடக்கம்! தொழிற்சங்கப் போராட்டங்கள் வீச்சாக நடந்தன. சிம்சன் தொழிலாளர் போராட்டம் மிக எழுச்சியாக நடந்தது. அப்போதே கருணாநிதி முதலைமைச்சர் கடுமையாகத் தொழிலாளர் போராட்டத்தை ஒடுக்கினார்.

இளவேனில் இதழில் சிம்சன் தொழிலாளர் போராட்டத்தையும், மற்ற தொழிலாளர் போராட்டத்தையும் ஆதரித்து சூறாவளிச் சொற்களில் கட்டுரைகள் வந்தன! தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்து – கவிஞர் ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதை வரிகள் சில நினைவில் இருக்கின்றன. அப்போது அவருடைய புனைபெயர் விடிவெள்ளி

"ஆதிக்க வெள்ளத்தின் அடியில் கிடந்தாலும்
பாதிக்கப் படாதவனே பாஸ்பரசே… கண்விழிப்பாய்!
நாங்கள் தொழிலாளிகள்
வானத்தைக் கீறி வைகறையைப்… பெயர்த்தெடுப்பவர்கள்!"

இப்போதெல்லாம்
பஞ்சதந்திரக் காட்டில்
நரிகளே இல்லை!
அவையெல்லாம் சட்டமன்றத்திற்கும்
நாடாளுமன்றத்திற்கும்
தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டன!
இப்போதெல்லாம் கண்ணபிரான்கள்
துரியோதன்களுக்குத் தேரோட்டப் போய்விட்டார்கள்.
துரியோதனன் கொடுக்கும்
அடிப்படைச் சம்பளமும்
அகவிலைப்படியும் அதிகமாம்!

வெளிநாட்டுக் கவிதை வடிவங்கள் பலவற்றைத் தமிழ்ப் புதுக்கவிதையில் அறிமுகம் செய்தவர் ஈரோடு தமிழன்பன்! சிலி நாட்டின் மா கவிஞர் பாப்லோ நெருடா தமிழன்பனின் செல்லக் கவிஞர்!

ஈரோடு தமிழன்பன் அவர்கள் கவிதைகளைப் படித்து வந்தாலும் அவருடன் நேரடித் தொடர்பில்லாமல் இருந்தது.

சென்னை பெரியார் திடலில் 1990 பிப்ரவரி 25 அன்று "தமிழ்த்தேசியத் தன்னுரிமை மாநாடு" என்ற முழுநாள் மாநாட்டை எமது அமைப்பு முன்முயற்சி எடுத்து, பொதுத் தன்மையுடன் நடத்தியது. பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் எங்களோடு ஈழவிடுதலை ஆதரவுப் போராட்டங்களில் தோழமை ஆனவர். இந்தத் தன்னுரிமை மாநாட்டிற்கு அவர் உழைப்பு முக்கியமானது. சுபவீ யும் நானும் சென்னை புதுக்கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஈரோடு தமிழன்பன் அவர்களைப் பார்த்து "தமிழ்த்தேசிய தன்னுரிமை மாநாட்டில் கவிதை பாட அழைத்தோம். மன மகிழ்வோடு ஒப்புதல் தெரிவித்தார்.

மாநாட்டில் அவர் கவிதை மிகமிக எடுப்பாக எழுச்சி ஊட்டியது! தமிழ்த்தேசியத்தை ஆதரித்த கவிதை அது! அப்போது சோவியத் நாட்டிலிருந்து பிரிந்து போக அஜர்பைஜான் குடியரசு போராடியது.

ஈரோடு தமிழன்பன் கவிதை வரிகளில் சில நினைவில் இருக்கின்றன.

"தமிழ்நாட்டிற்குத் தன்னுரிமை தராவிட்டால்
அஜர்பைஜான் நெருப்பு
அசோகச் சக்கரத்தையும் விசாரிக்கும்!"

என்று கவிதையை முடித்தார். ஒரே கைதட்டல்! துக்ளக் ஏடு அம் மாநாடு பற்றி 3 பக்கங்கள் கட்டுரை வெளியிட்டுத் தாக்கியது. அக்கட்டுரையின் தலைப்பு "இலக்கு பிரிவினை! வழி வன்முறை!" என்பதாகும். அதில் ஈரோடு தமிழன்பனின் மேற்கண்ட வரிகளைக் குறிப்பிட்டிருந்தது துக்ளக்! அப்போதைய தி.மு.க. ஆட்சியின் ஆதரவுடன் இம் மாநாடு நடந்ததாக அபாண்டமாகக் கூறியது துக்ளக்!

புதுக் கல்லூரியில் பேராசிரியராக இருந்து கொண்டே இந்திய அரசின் தூர்தர்ஷன் தமிழ்த் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகவும் தமிழன்பன் பணியாற்றினார். துக்ளக் அவரைப் பிரிவினைவாதி என்று சாடியவுடன் தூர்தர்ஷன் தொலைக்காட்சி செய்திவாசிப்பாளர்

பணியில் இருந்த அவரை நீக்கியது. அம்மாநாட்டிற்குப் பிறகு தமிழன்பன் அவர்களுடன் நட்பும் நெருக்கமும் எனக்கு அதிகமானது.

(அம் மாநாட்டில் கவிதை வழங்கிய கவிஞர் அறிவுமதி இந்தியத் தேசியக் கொடியை அவமதித்துவிட்டார் என்று குற்றம் சாட்டி எட்டாண்டுகள் வழக்கு நடந்தியது தமிழ்நாடு அரசு. பின்னர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

பிரிவினைத் தடைச்சட்டம் 1967-இன் கீழ் என்னைக் கைது செய்து சென்னை நடுவன் சிறையில் அடைத்தது கருணாநிதி ஆட்சி! பிணையில் வந்து எட்டாண்டுகள் வழக்கு நடத்தி விடுதலை ஆனேன்!)

எவ்வளவோ படைப்புகளை வழங்கி தமிழைச் சமகாலத்தில் வளப்படுத்தினார் ஈரோடு தமிழன்பன்! கரந்தையில் படிக்கும்போது பாவேந்தருடன் ஏற்பட்ட பழக்கதில் பின்னர் அவருடன் நெருக்கம் ஆனார்!

எல்வளவு புகழ்படைத்தாலும் ஆணவம் இல்லாமல் பழகிய பண்பாளர் ஈரோடு தமிழன்பன்! தமிழ் ஏரோடு வந்து படைப்புப் பயிர் செய்தவர் ஈரோடு தமிழன்பன்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களுக்குத் தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் சார்பில் வீரவணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்.

–

பெ. மணியரசன்,

தலைவர்,
தமிழ்த்தேசியப் பேரியக்கம்
தலைமைச் செயலகம்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் உடல் 30 குண்டுகள் முழங்க காவல்துறை மரியாதையுடன் தகனம்!

Sunday, November 23, 2025, 14:30 [IST] Subscribe to Oneindia Tamil

சென்னை: மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பனின் தமிழ் மொழித் தொண்டைப் போற்றும் வகையில் அவரின் உடலுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.அதன்படி, கவிஞர் ஈரோடு தமிழன்பன் உடல், 30 குண்டுகள் முழங்க காவல்துறை மரியாதையுடன் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

மூத்த தமிழறிஞரும், கவிஞருமான ஈரோடு தமிழன்பன் மூச்சுத்திணறல் பிரச்சனையால் பாதிக்கப்பட்டிருந்தார். இதற்காக அவர், சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். அவருக்கு வயது 92.

மரணமடைந்த ஈரோடு தமிழன்பன் உடல் சென்னை கோயம்பேட்டில் உள்ள இல்லத்துக்கு எடுத்து செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிச்சடங்கு சென்னை அரும்பாக்கம் மின் மயானத்தில் இன்று காலை நடைபெறுகிறது. ஈரோடு தமிழன்பன் உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார்.



மேலும், ஈரோடு தமிழன்பன் மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்தார். முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், "செம்மொழித் தமிழின் மூத்த கவிஞரும், சாகித்திய அகாதமி விருது பெற்றவருமான **'கவிஞர் ஈரோடு**

தமிழன்பன்' அவர்கள் உடல்நலக்குறைவால் இன்று சனிக்கிழமை (22.11.2025) காலமானார் என்ற செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியும், சொல்லொணாத் துயரமும் அடைந்தேன்.

காங்கேயம் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட, ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் பிறந்து, தமிழின் சிகரங்களைத் தொட்டவர் ஈரோடு தமிழன்பன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெரிதும் போற்றப்பட்ட மகா கவிஞர் இவர்.

வாழ்வும் பணியும்


https://erodetamilanban.com/%E0%AE%A8%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AE%E0%AF%82%E0%AE%B2%E0%AE%AE%E0%AF%8D/

தமிழகத்தில் மாபெரும் சமூகப் புரட்சிக்குக் கால்கோளிட்ட தந்தை பெரியார் பிறந்த நகரம் ஈரோடு. அந்நகருக்கு மிக அருகில் அமைந்த ஊர் சென்னிமலை. அவ்வூரில் வாழ்ந்த திரு செ. இரா. நடராசன்–திருமதி வள்ளியம்மாள் இணையருக்கு 28.09.1933இல் பிறந்தவர் ந. ஜெகதீசன். இவருக்குத் தமையர் இருவர், தம்பியர் ஐவர், தங்கை ஒருவர் ஆவர்.

குடும்பச் சூழல் தமிழ்ச் சூழலாக அமைந்தமையால் பாப்புனையும் ஆற்றல் இயல்பாகவே வாய்க்கப் பெற்றார் ஜெகதீசன். பள்ளிப் பருவந்தொட்டுக் கவிதைப் படைப்பில் அவர் ஈடுபடலானார். தமிழ்மீது கொண்ட தணியாத காதலால் ஜெகதீசன், 'தமிழன்பன்' என்னும் புனைபெயர் பூண்டார். ஈரோட்டில் மதரசா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிவந்த நாள்களில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் தலைமையில் கவியரங்குகளில் பங்கேற்ற வேளைகளில் அவர்தான் ஈரோட்டைத் தமிழன்பனோடு இணைத்து அழைத்தார். அவ்வடிவமே அவரது இயற்பெயரினும், மலையமான், விடிவெள்ளி என்னும் அவரது வேறு புனைபெயர்களினும் தமிழ்கூறு நல்லுலகில் நிலைபெற்றுவிட்டது. அவ்வாறே தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அப்பெயரே நிலைத்துவிட்டது. .

ஈரோடு தமிழன்பன் 1972 அக்டோபர் 26ஆம் நாள் சாந்தகுமாரி அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். அவர்களது

இல்லறப் பயனாக ஆண்கள் இருவர் பிறந்தனர். மூத்த மகனுக்குப் பாப்லோ நெருதா என்றும் இளைய மகனுக்குப் பாரதிதாசன் என்றும் பெயர் சூட்டியதிலிருந்தே ஈரோடு தமிழன்பனின் கொள்கைப் பிடிப்பையும் கவிதை ஈடுபாட்டையும் அறிந்துகொள்ளலாம். பாப்லோ நெருதா இப்போது சென்னையில் புகழ் பெற்ற அறுவை மருத்துவர்களுள் ஒருவர் ஆவார். பாரதிதாசன் அமெரிக்காவில் புகழ் பெற்ற மூளை நரம்பியல் அறுவை மருத்துவர் ஆவார்.



ஈரோடு தமிழன்பன் சென்னிமலையில் பள்ளிப் படிப்பையும், கரந்தைத் தமிழ்க் கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் உயர்கல்விப் படிப்பையும் பெற்ற பின்னர்ச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டமும்

தனிப்பாடல் திரட்டு என்னும் பொருண்மையில் ஆய்வு நிகழ்த்தி முனைவர் பட்டமும் பெற்றவர். சென்னைப் புதுக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். ஈரோடு தமிழன்பன் இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அரபு ஐக்கியக் குடியரசு, அமெரிக்கா முதலிய அயல்நாடுகள் பலவற்றிற்கும் பயணம் செய்த பெருமைக்குரியவர். மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழின் ஆசிரியராகவும் அவர் திகழ்ந்துவருகிறார். பாலச்சந்தர் இயக்கிய 'அச்சமில்லை அச்சமில்லை ' , மற்றும் 'ஏழாவது மனிதன் ' பட இயக்குநர் அரிஹரன் இயக்கிய 'நீயும் நானும் ' என்னும் திரைப்படத்திற்கும் அவர் பாடல் இயற்றியுள்ளார். ரோம் நகரில் சிறந்த படைப்புக்கான விருது பெற்ற 'வசந்தத்தில் ஒரு வானவில் ' எனும் படத்திற்கு இணை இயக்குநராகவும் கதைவசன ஆசிரியராகவும் பணியாற்றினார்.

பள்ளித் தமிழாசிரியர், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், தமிழறிஞர், மரபுக் கவிஞர், கவியரங்கக் கவிஞர், புதுக்கவிதைக் கவிஞர், குறும்பாக் கவிஞர், குழந்தைக் கவிஞர், சிறுகதை ஆசிரியர், புதின ஆசிரியர், நாடக ஆசிரியர், சிறார் இலக்கியப் படைப்பாளி, வாழ்க்கை வரலாற்றாசிரியர், திறனாய்வாளர், கட்டுரையாளர், சொற்பொழிவாளர், திரைப்பட இயக்குநர், திரைப்படப் பாடலாசிரியர், தொலைக்காட்சியின் செய்திவாசிப்பாளார், ஓவியர், அரிமா நோக்கு இதழாசிரியர், ஓய்வறியாப் படிப்பாளி, 90க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்த ஓயாத படைப்பாளி எனப் பன்முகப்பட்ட ஆளுமைளை உடையவர் அவர். இவை எல்லா வற்றுக்கும் மேலாகத் தலைசிறந்த மனிதராகவும் திகழ்பவர் அவர். சிலரைப்போலத் தத்துவங்களைத் தடுமாற விட்டுவிட்டுத் தடுமாற்றங்களை எல்லாம் தத்துவமாக்கிக் கொண்டிருப்பவரோ, சித்தாந்தங்களைச் சிதற விட்டுவிட்டுச் சிதறல்களை எல்லாம் சித்தாந்தமாக்கிக்கொண்டிருப்பவரோ அல்லர் அவர். கொண்ட கொள்கையில்-அதாவது பெரியாரியம், மார்க்சியம், தமிழ்த் தேசியம் என்னும் கொள்கையில் என்றும் மாறாத உறுதி பூண்டவர் அவர்; எந்நிலையிலும் நிறம் மாறாத-என்றும் வாடாத நறுமலர் அவர்.

காணொளிகள்

01] ஈரோடு தமிழன்பன். தமிழ் இலக்கிய வரலாறு.
https://www.youtube.com/watch?v=yQp6uX7DXOQ [15:19]

02] ஈரோடு தமிழன்பன் நினைவேந்தல் (3.02.2026)
https://www.youtube.com/watch?v=IsA-vpv1GJ8 [2:03:46]

03] கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களின் மறைவு அவரது திருஉடலுக்கு மாலை அணிவித்து வீரவணக்கம்
https://www.facebook.com/watch/?v=1855635188491622 [15:00]

04] தமிழன்பன் - 80 விருதளிப்பு | ஈரோடு தமிழன்பன்
https://www.youtube.com/watch?v=9ivCczMrI6o [30:48]

05] ஈரோடு தமிழன்பன் | கவிக்கோ நினைவேந்தல்
https://www.youtube.com/watch?v=dIwJ9JOAdUU [15:25]

06] யுகபாரதி 4 நூல்கள் வெளியீட்டு விழா | ஈரோடு தமிழன்பன் பேச்சு
https://www.youtube.com/watch?v=ZWCaiK0OMuI [26:03]

(😊)(😊)(😊) ஈரோடு தமிழன்பன் (😊)(😊)(😊)







